பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை 17.11.2017 கதிர் 12

கொள்ளையிடப்பட்ட 15 கைபேசிகளுடன் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 17
பருத்தித்துறையில் கொள்ளையிடப்பட்ட 15 கையடக்கத் தொலைபேசிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பருத்தித்துறையில் வைத்து இந்தச்சந்தேகநபர்கள்நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்
பக்கம் 18 »»»

அதிகாரப் பகிர்வுக்குத் தயாரா? பகிரங்கப்படுத்தட்டும் மஹிந்த

நாடாளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 17
இனவாதத்தைத் தூண்டி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை மஹிந்த ராஜபக்ஷ குழப்பக் கூடாது. அரசியல் இலாபத்துக்காகத் தீர்வு முயற்சியை அவர் தடம் புரளச் செய்யக்கூடாது. அதி காரப் பகிர்வுக்குத் தயாரா? இல்லையா? என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும்.
– இவ்வாறு நேற்று முன் னாள் ஜனாதிபதி மஹிந்த
பக்கம் 18 »»»

ஆனைக்கோட்டை வாள்வெட்டு;

அதிகாலையில் வீடுகளில் வைத்து மூன்று பேரை மடக்கியது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 17
ஆனைக்கோட்டை லோட்டஸ் வீதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வீடொன்றுக்குள் புகுந்து ஒருவரை வெட்டிக் காயப் படுத்தியதுடன், அங்கி
பக்கம் 18 »»»

எல்லை நிர்ணய வர்த்தமானிக்கு எதிரான மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, நவ. 17
உள்ளூராட்சிமன்றங் களின் எல்லை மீள்நிர் ணயம் தொடர்பான வர்த் தமானி அறி வித்த லுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை
பக்கம் 18 »»»

காணாமற்போனோர் தொடர்பில் அரசு மீண்டும் விசாரணையாம்!

உறவினர்களுக்கு நேற்று உரிய பதிலை வழங்காமல் காலத்தை மேலும் இழுத்தடிக்க மைத்திரியும் திட்டம்

கொழும்பு, நவம்பர் 17
தமிழர் தாயகப் பகுதிகளில் காணாமற்போனவர்கள் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை முன்னெடுக்க நல்லாட்சி அரசு தீர்மானித்துள்ளதால் அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் முயற்சியில் முட்டுக் கட்டை நிலை - கால தாமதம் ஏற்பட்டுள்ளது.
பக்கம் 18 »»»

உள்ளக சுயநிர்ணயம், பகிரப்பட்ட இறைமை ஆகியவற்றின் அடிப்படையிலேயேதான் தீர்வு

தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் மத்தியில் சம்பந்தன்

கொழும்பு, நவ. 17
தமிழ் மக்களின் உள் ளக சுயநிர்ணயம், பகிரப் பட்ட இறைமை ஆகியவற் றின் அடிப் படை யில் தான் அரசியல் தீர்வு எட்டப் படும். இதில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு உறுதி யாக உள்ளது.
இவ்வாறு நேற்றுத்
பக்கம் 18 »»»

அரசியல் தீர்வு தொடர்பான விக்கியின் விமர்சனத்தை வரவேற்கிறார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 17
அரசியல் தீர்வு தொடர் பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் விமர்சனம்
பக்கம் 18 »»»

நல்லாட்சி அரசை வீழ்த்த என் பக்கம் நிற்பர் மக்கள்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, நவ. 17
ரணில் - மைத்திரி தலை மையிலான நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பும் புரட்சியில் நாட்டு மக்கள் என்னு டன் கை
பக்கம் 18 »»»

நல்லாட்சியின் பட்ஜெட்டுக்கு கைகொடுத்தது கூட்டமைப்பு

93 மேலதிக வாக்குகளினால் 2 ஆம் வாசிப்பு நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 17
2018ஆம் நிதியாண் டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக் குகளால் நிறைவேற்றப் பட்டது. வரவு - செலவுத்
பக்கம் 18 »»»

வாள்வெட்டுக் குழுக்களை உடனடியாகக் கைது செய்க!

நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 17
வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண் டும்.
இவ்வாறு நேற்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்
பக்கம் 18 »»»

அரியாலை இளைஞர் சுட்டுக்கொலை;

அதிரடிப்படைப் புலனாய்வாளர்களை அடையாளம் காட்டவில்லை சாட்சி

யாழ்ப்பாணம், நவ. 17
அரியாலையில்இளைஞ னைச்சுட்டுக்கொன்றகுற்றச் சாட்டில் கைதாகி விளக்க மறியலில் உள்ள சிறப்பு அதிரடிப்படைப் புலனாய் வாளர்கள் இருவரையும் சாட்சி அடையாளம் காட்ட வில்லை.
இதனையடுத்துச் சந்
பக்கம் 18 »»»

இரு கைக்குண்டுகள் வவுனியாவில் மீட்பு

வவுனியா, பிரம்பம் மடுப் பகுதியிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
காணித் துண்டொன் றில்சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் கை குண்டுகளைக் கண்டுள் ளனர்.
இதுதொடர்பில்பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், பொலிஸ் விசேட அதிரடிப்படையின்குண்டு செயலிழக்கும் பிரிவினரி டம் அந்தக் கைக்குண்டு கள் ஒப்படைக்கப்பட்டன.

மூலை முடுக்கெல்லாம் பொலிஸார் சோதனை

மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனிடம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிரித்துள்ள வாள்வெட்டுக் கும்பல்களைஅடக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் பணியாற்றும் சகல பொலிஸ் உத்தியோகத்தர்களின
பக்கம் 18 »»»

காலைக்கதிர் Kalaikkathir

வவுனியாவில் முன்னாள் போராளிகளுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை!

வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா கூறுகின்றார்

வவுனியா, நவ. 17

வவுனியாவில் அடுத்த வருடம் முன்னாள் போராளிகள் மற்றும் இந்தியாவிலிருந்து திரும்பி அழைக்கப்பட்டவர்களுக்கு 100 வீட்டுத்திட்டம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, கள்ளிக்குளம், சிதம்பரம் கிராமத்தில் இடம்பெற்ற கிராம சக்தி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிராம சக்தி வேலைத்திட்டம் கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது நாடு முழுவதும் இவ் வேலைத்திட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் சிந்தனையில் இந்த நாட்டிலிருந்து வறுமையை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும் எனத் தெரிவித்து அதற்கு ஒரு திட்டத்தை வகுத்து இது ஒரு நீண்டகால த்திட்டத்திற்கு அமைவாக 2030 ஆம் ஆண்டளவிலே இது முடிவுறும். அதன் ஆரம்பமே இன்றைய நிகழ்வு.

துரதிஷ்டவசமாக இந்த 30வருட யுத்தத்தில் ஒரு தேங்கிய நிலை வந்துவிட்டது. இல்லாவிட்டால் இலங்கை சிங்கப்பூர் போல வந்திருக்கும் அதேநேரம் சிங்கப்பூரில் அரச கரும மொழியாக தமிழ் காணப்படுகின்றது. சிங்கப்பூரை வளர்த்துவிட்டதே தமிழர்கள் தான். தற்போது ஜனாதிபதியாகக் கூட தமிழர் ஒருவரே இருக்கின்றார்.

அங்கு இருப்பவர்களைக் கேட்டாலே சொல்வார்கள் சிங்கப்பூரை வளர்த்துவிட்டது தமிழர்களே என்று. அதேபோல சுவிஸ், லண்டன் எங்கு சென்று பார்த்தாலும் இன்று தமிழர்களே கோடீஸ்வரர்கள். இங்கு வாழுகின்ற நாங்கள் மட்டும் கஷ்டப்படுகின்றோம்.

இதைவிடக் கேவலமான விடயம் இந்தியாவில் போய் இருக்கின்றார்கள். இந்தியாவில் போய் இருப்பவர்களுக்கு எவ்வித முன்னேற்றமும் இல்லை ஆகக்குறைந்தது ஒரு 300பட்டதாரிகளை உருவாக்கி இருக்கின்றார்களே தவிர இங்கிருந்து எவ்வாறு சென்றார்களோ அவ்வாறே அங்கும் இருக்கின்றார்கள் இங்கு வாருங்கள் என்று கூப்பிட்டால் கூட வருகின்றார்கள் இல்லை.

ஆகவே எங்களுடைய மனப்பாங்கில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். நாங்கள் இந்த நாட்டு மக்களுடன் இணைந்து அபிவிருத்தியில் பங்கெடுத்து இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய பங்களிப்பைவழங்கி வறுமை நிலையிலிருந்து விடுபட்டு முன்னுக்கு வர வேண்டும்.

அதற்கான திட்டமே இது. இந்தக்கிராமத்தை அபிவிருத்தி அடைந்த கிராமமாக மாற்றவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது.

அடுத்த வருடமளவில் 100 வீட்டுத் திட்டம் அமைத்து முன்னாள் போராளிகளுக்கு மற்றும் இந்தியாவிலிருந்து திரும்பியவர்களுக்கு வழங்குவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளோம் இப்பகுதியில் அவர்களையும் குடியேற்றவுள்ளோம். ஒரு ஏக்கர் காணி உள்ளவர்களின் 50பயனாளிகளை தருமாறும் அவர்களுக்கு முருங்கை செயற்றிட்டத்தில் உள்வாங்கி முருங்கை விதை தருவார்கள். அதை வைத்து வளர்த்து அவர்களிடம் திருப்பி 25ரூபாவிற்கு கொள் முதல் செய்வார்கள். இச் செயற்றிட்டத்தில் முயற்சியானவர்கள் கிராம அலுவலரிடம் பெயர் விவரங்களை வழங்குமாறும் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (க-100)

பட்டப் படிப்பிற்கான இலவசக் கல்வி வெறும் கண்துடைப்பு மட்டுமே!

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு

வவுனியா, நவ. 17

எமது நாட்டில் பட்ட மேற்படிப்புக்கான இலவசக் கல்வி என்பது வெறும் கண்துடைப்பு மட்டுமே என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நாட்டில் உயர் கல்விபட்டமேற்படிப்புக்காக அடுத்தவருடவரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது நல்ல விடயம்.

இருப்பினும் எமது நாட்டின் தேவையுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைபாடான செயற்பாடாகவே காணப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களின் தெரிவுகளில், அதற்காக அனுமதிக்கான தகுதி பெற்றவர்களின் 16வீதமானவர்கள் மாத்திரம் தான் பட்டப்படிப்புக்காக தெரிவு செய்யப்படுகிறார்கள்.

அதாவது, இலவச பட்டப் படிப்புக்காக தெரிவு செய்யப்படுகிறார்கள். எனவே இதில் 84 வீத மாணவர்களுக்கான இலவச பட்டப்படிப்பு மறுக்கப்படுகிறது.

எனவே, எமது நாட்டின் இலவசக் கல்வித் திட்டம் என்பது உயர் கல்வியைப் பொறுத்தவரை 16 வீதம் மட்டும் தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எனவே, இங்கு இலவசக் கல்வித் திட்டம் என்று கூறுவது தவறாகவே காணப்படுகிறது. இந்த இலவசக் கல்வித் திட்டத்தில் 84 வீதமான வர்கள் மறுக்கப்பட்ட நிலையில், இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளும் நிலைக்கு இந்த நாடு அவர்களைத் தள்ளியுள்ளது கவலைக்குரிய விடயம்.

வெளிநாடுகளுக்குச் சென்று கற்க முடியாத ஒரு தொகுதியினர் உள்நாட்டு தனியார் கல்வி விசேடநிறுவனங்களில் கல்வியை நாடுகின்றனர். இதில் சட்டம், தகவல் தொழில்நுட்பம், கப்பல் துறை, கணக்கியல், மருத்துவம்எனபலவகைகளைக் காணலாம்.

இன்று இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மாத்திரமே பெரும் சவால்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசின் ஒரு கொள்கைப் பிரகடனத்தில் சகல கல்வித் துறைகளுக்கும் சமமான விதத்தில் தான் அதைப் பராமரிக்கவேண்டும்.

அவ்வாறிருந்தும் இந்த தனியார் மருத்துவத் துறையில் ஈடுபட்ட சைட்டம் என்ற நிறுவனம் அதில் கல்வி பயிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று கவலைக்குரிய விதத்தில் இக்கட்டான தொரு சூழலில் சிக்குண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கான தீர்மானங்களை எடுத்துள்ளதாகக் கூறும் இந்த அரசு தற்போது ஆட்சிக்கு வந்து இருவருடங்களைக்கடந்திருக்கும் நிலையில் உரிய பொறுப்புக்களை நிறைவேற்றியிருப்பதாகத் தெரியவில்லை.

அதன் காலக்கெடு இன்னும் பின்தள்ளிப் போகுமோ என்று இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அல்லலுற்றிருக்கிறார்கள். அவர்கள் மாத்திரம் இதனால் பாதிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையால் மருத்துவத்துறையின் தகுதி நிலையைக் குறிப்பிடுகிறார்கள். அதாவது மருத்துவ சேவையின் தர நிலை முக்கியமானதும் கூட.

ஆகவே,தகுதிநிலையை தர நிர்ணயம் செய்யும் நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்படாது செயற்பட வேண்டியது முக்கியமானது. அவர்கள் நியாயமானவர்களாகச் செயற்பட கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதைவிடுத்து தங்களது தனிப்பட்டக் கருத்துக்களை உட் புகுத்துபவர்களாக இருக்கக் கூடாது.

இங்கு மருத்துவத் துறையில் ஆர்வத்துடன் கல்வி கற்ற மாணவர்களின்நிலைஇவ்வாறென்றால், இந்த நாட்டில் மருத்துவ சேவை எவ்வாறு முன்னேறி வரப் போகின்றது என்பது கேள்விக்குறியே.

இதனால் உள்நாட்டு தனியார் மருத்துவ பீட மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று வைத்தியர்கள் வெளியேறாததால் இந்த மருத்துவத் துறையில் உள்ளகப் பயிற்சி பெற வேண்டியவைத்தியர்கள் வைத்தியசாலைகளுக்குச்செல்லவில்லை.அவர்களைநியமிக்கவில்லை.

இதனால் உள்ளகப் பயிற்சி முடித்த மாணவர்கள் கடமைக்குச் செல்ல முடியாத நிலையில் முடங்கிப்போய் இருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தத்தில் இந்த மருத்துவத் துறையின் ஸ்தம்பிதம் என்பது இந்த நாட்டில் பெரும் பிரச்சினையாகவே தொடர்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-100)

உலக சைவத் திருச்சபையின்
ஆதரவில்
கலாநிதி வி.அடியார் விபுலாநந்தாவின்
ஏற்பாட்டில்

விவாத அரங்கு

தலைப்பு:
தமிழரின் சமயம் சைவமா? ஹிந்துவா?

தலைமை:
பரா.நந்தகுமார்
(பொதுச் செயலாளர், அகில இலங்கை சைவ மகாசபை)

இடம்:
நாவலர் மண்டபம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:
19.11.2017 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:
பிற்பகல் 3 மணிக்கு

(அனைவரும் வருக)

ஈ.பி.ஆர்.எல்.எவ். மாற்று அணி கூட்டமைப்புக்குள் வருகின்றது

ஈ.பி.ஆர்.எல்.எவ். மாற்று அணியை (சமூக ஜனநாயகக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்குள் உள்வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் கூட்டமைப் பின் தலைவர்களுக்கும் இடை யிலான சந்திப்பில் இந்த விடயம் எதிரொலித்தது.

இது தொடர்பில் கூட்டத்தில் 'காலைக்கதிர்' பத்திரிகை சார்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், இவர்களை கூட்டமைப் பில் இணைப்பது தொடர்பில் 2 வருடத்துக்கு முன்னர் பேசப்பட் டது. இதன்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அதனை எதிர்த்தது. இப்போது அவர்களை இணைக்க முயற்சி நடக்கிறது.

புளொட் தலைவர் த.சித் தார்த்தன் தெரிவிக்கையில்–

ஒரு வருடத்துக்கு முன்னரே அவர்களை இணங்கச் சம்மதித்து விட்டோம் – என்றார்.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில்–

எமது கட்சியே அவர்களை இணைக்க முயற்சி எடுக்கிறது. அதனை நாம் வரவேற்கிறோம். – என்றார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராசாகூறுகையில்–

இது தொடர்பில் எமது கட்சி யின் மத்திய குழு ஆராய்ந்து அதனை அரசியல் குழு முடி வெடுப்பதற்காக விட்டுள்ளது – என்றார்.

இது குறித்து கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில் –

இரண்டு கட்சிகள் சம்மதம் தெரிவித்துள்ளன. ஒரு கட்சி விரைவில் முடிவு செய்யவுள்ளது. – என்றார்.

மிருசுவிலில் இன்று வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச் சேரி பிரதேச சபை பொது மண்ட பத்தில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும், சிறப்பு விருந்தி னராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வ ராணி ஜெகதீசன், கௌரவ விருந் தினராக உசன் கிராம சேவை உத்தியோகத்தர் செல்வி நா.தர் சினி ஆகியோர் கலந்து கொள் வார்கள்.

இதில் கலை நிகழ்வுகளும் பரிசில்கள் வழங்கலும் இடம்பெற வுள்ளன. (இ)

கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தான மகரஜோதி மண்டல விரத மஹோற்சவ விழா

இன்று விரத மாலை அணிதலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.17

கோண்டாவில் ஈழத்து சபரி மலை சபரீச ஐயப்ப தேவஸ் தானத்தின் வருடாந்த மகரசங் கிராந்தி மகர விளக்கு மண்டல விரத மகோற்சவ பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம் பமாகி எதிர்வரும் தை மாதம் 14 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை விரத மாலை அணிதல் இடம்பெறுவதோடு, தினமும் காலை 5 மணிக்கு நடை திறத் தல், 6 மணிக்கு பால் பூஜை, 7 மணிக்கு கணபதி ஹோமம், மூலவர் அபிஷேகம், விசேட பூஜையும், மதியம் 12 மணிக்கு உச்சிக்காலப் பூஜை இடம் பெறும்.

அதனைத்தொடர்ந்து மாலை 5மணிக்கு அஸ்டாஅபிஷேகம், 6 மணிக்கு விஷேட பூஜை, 6.30 மணிக்கு வசந்த மண்ட பப் பூஜையைத் தொடர்ந்து 7 மணிக்கு பஜனை இடம்பெறும்.

இரவு 8.30 மணிக்கு 18 ஆம் படி பூஜையும், 9 மணிக்கு ஹரிவராசனம் நடைசாத்துதல் நிகழ்வும் அதனைத்தொடர்ந்து பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கல் இடம்பெறும்.

60 நாள்கள் நடைபெறும் இவ்விழாவில், மதியம் அன்ன தானமும், இரவுசக்தி பூஜையும் வழங்கப்படும்.

அத்துடன் இந்தவிழாக்காலங் களில் கேரள செண்டைமேளம் வாசிக்கப்படுவதோடு, விஷேட தவில் மற்றும் நாதஸ்வர வித்து வான்களின் மங்கள இசையும் நடைபெறும்.

60நாள்கள்நடைபெறவுள்ள இவ்விழாவில் தேவஸ்தான இள வரசர்களான அ.ஹரிப்பிரிய சர்மா (குருசாமி), அ.சபரீச சர்மா, அ.அஷ்சய சர்மா மற்றும் தேவஸ்தானபிரதமகுருவும்தர்ம கர்த்தாவும் குருசாமியும் மஹோற்சவக் குருமணியு மான சாஸ்தா பூஜா துரந்தரர் சிவஸ்ரீகி.ஹரிஹரசதசிவாச்சாரி யாரும் கலந்து சிறப்பிப்பார் கள். (இ)

நயினாதீவிலும் சபரீச ஐயப்பனின் மகரஜோதி விழா

நயினாதீவு – மலையிற்புலம் ஸ்ரீமலையின் ஜயனார் ஆலயம் அருள்மிகு ஸ்ரீசபரீச ஐயப்பனின் மண்டல பூஜையும், மகரஜோதிப் பெருவிழாவும் இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் எதிர்வரும் தை மாதம் 14 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித் துள்ளனர்.

இன்றுவெள்ளிக்கிழமைமண் டலபூஜை ஆரம்பமாகி சுவாமி மார்களுக்கு மாலை அணி யும் நிகழ்வு நடைபெறுவதோடு, எதிர் வரும் தை மாதம் 14 ஆம் திகதி மகரஜோதிப் பெருவிழா இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ)

விக்கியின்...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுக் கொழும்பில் சந்தித்துப் பேசிய போதே சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கடுமை யான விமர்சனங்களை முன்வைத்து வருகிறாரே எனப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் சம்பந்தனிடம் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே சம்பந்தன் மேற்கண் டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

அப்படி ஒரு கருத்து தமிழ் மக் களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் உள்ளது என்ற செய்தி தென்னிலங்கைக்குத் தெரியத்தானே வேண்டும். அரசி யல் தீர்வு தொடர்பில் தனது கருத்தைத் தெரிவிக்கும் முழு உரிமை அவருக்கு உண்டு. அதை நாம் மறுக்க முடி யாது.

அவர்அப்படிப்பேசுவதும்நான் இப்படித் தீர்வுக்கு முயற்சிப்பதும் ஒரே சமயத்தில் நடப்பது நல் லதுதானே – என்று சிரித்துக் கொண்டு கூறினார் சம்பந்தன்.

"அப்படியானால் நீங்கள் இருவரும் சேர்ந்து திட்டமிட்டுத் தான் காய் நகர்த்துகின்றீர்கள் என்று பல வட்டாரங்களில் பேசப் படுவது உண்மைதான் போலும்" – என்றார் ஒரு பத்திரிகையாளர்.

பலத்த சிரிப்புடன் அதற்குப் பதில் கூறாமல் சமாளித்தார் சம் பந்தன் (உ)

எல்லை...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர்களால்நேற்றுமுன்தி னம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நேற்று வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுவை எதிர் வரும் 22ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூராட்சிமன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியி டப்பட்ட, வர்த்தமானி அறிவித் தல் செல்லுபடியற்றது என அறிவிக்கக் கோரி மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதி களாக, உள்ளூராட்சி மன் றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ் தபா மற்றும் குறித்த அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிமன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிந்துரைகளைப் புறந்தள்ளி அமைச்சர் பைசர் முஸ்தபாவால் குறித்த வர்த்தமானி வெளியி டப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், இதுபோன்று செயற்பட அவருக்கு அதிகாரம் இல்லை எனவும், அது சட்ட விரோதமானது எனவும் அவர் கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற் றது என அறிவிக்குமாறு தமது மனுவில் அவர்கள் கோரியுள் ளனர்.

உள்ளக...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சம்பந்தன் மேலும் கூறியவை வருமாறு:–

மூன்று மட்டங்களில் அதிகா ரம் பகிரப்படும். மத்தி மாகா ணம், உள்ளூராட்சிமன்றங்கள் அவை.

மாகாணத்துக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறமுடியாத நிலையை யும் தூன் பிரயோகிக்க முடியாத நிலையும் உறுதிப்படுத்தினால் அது சமஷ்டிதான்.

உள்ளக சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட்டால் அது சமஷ்டிதான்.

இந்தத்தீர்வில்நிச்சயம்சமஷ்டி அலகு என்ற பெயர் இருக் காது. ஆனால் அது சமஷ்டிக்குரிய அனைத்தையும்கொண்டிருக்கும்.

இணைப்பு விடயம் சிக்கல் தான். சாத்தியமான வழியில் அதைத் தீர்ப்போம்.

ராஜீவ் காந்தி கொல்லப்படா மல் இருந்திருந்தால் அத்தேர்த லில் அவா நிச்சயம் பிரதமராகி யிருப்பார். அவர் பிரதமராகி யிருந்தால் விடயங்கள் வேறு மாதிரி அமைந்திருக்கும் இணைப்பு உட்பட்ட விடயங்கள் அடங்கிய தீர்வு எட்டப்பட்டிருக் கும்.

எந்தக் கட்சியையும் கூட்ட மைப்பிலிருந்து நாங்கள் வெளியே விடவில்லை. எல் லோரையும் அரவணைத்துச் செல்வவே விரும்புறோம்.

எங்கள் மீது நம்பிக்கை வைக் காமல் நாங்கள் தீர்வு முயற்சி யில் ஈடுபடமுடியாது. எங்க ளுக்கு எங்கள் மீது முழு நம் பிக்கை உண்டு. அந்த நம்பிக் கையுடன்தான் பேச்சுக்கே சென் றிருக்கிறோம்.

இந்தத் தீர்வு முயற்சியை நாங் கள் குழப்பினோம் என்ற கெட்ட பெயர் எங்களுக்கு வரக் கூடாது. தீர்வு குழப்பினாலும், அ தைக் குழப்பியவர்கள் நாங்கள் என்ற பெயர்வரக் கூடாது. அப்படி இருந்தால்தான் அப்படித் தீர்வு குழம் பினாலும் அதற்குப்பின்னரும்காய்களை நகர்த்தி எங்களுக்குப் பலம் இருக்கும.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு உண்டு. பிரதம ருக்கும் உண்டு. எங்களுக்கு உண்டு

எந்தத்தீர்வுஎன்றாலும்அதை ஒளிவுமறைவாகச் செய்யமாட் டோம். எங்கள் மக்கள் முன் வைத்து அவர்களின் அனுமதி யுடன்தான் முன்னெடுப்போம். – என்றார் சம்பந்தன்.

அதிகாரப்...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தன்.

புதிய அரசமைப்புக்கான நகல் அரசமைப்புப் பேரவை யில் மூன்று மாதத்துக்குள் சமர்ப்பிக்கப்பட்டு மக்களுக்கு அது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான ஆறாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:–

நெருக்கடியான சந்தர்ப் பத்தில் சிறந்த வரவு – செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் வகையி லும்பலமுன்மொழிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன. பல பணிகளை நாம் செய்ய வேண் டியுள்ளது. அதற்கு இந்த வரவு – செலவுத்திட்டம் சிறந்த ஆரம் பம். வரவு – செலவுத் திட்ட முன் மொழிவுகளை அமைச்சுகள் மிக விரைவில் செயற்படுத்த வேண்டும்.

ராஜபக்ஷவின் செயற்பாடுகள்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற் பாடுகள் மக்கள் இடையே ஐக் கியம் இன்மையை ஏற்படுத்து கின்றன. அவர் அதிகாரப் பகிர் வுக்கு தயாரா இல்லையா என் பதை வெளிப்படையாகத் தெரி விக்கவேண்டும்.

மக்கள் ஆட்சியில் பங்கு கொள்ளவேண்டும் என்றால் அதிகாரம் பகிரப்படவேண்டும். அதிகாரப் பகிர்வை நாட்டைப் பிரிப்பதற்கான முயற்சி என்று மஹிந்த கூறுகிறார். அது முற்று முழுதான பொய். அதனை நான் நிராகரிக்கின்றேன். பிளவுப் படாததும் பிரிக்க முடியாதது மான நாட்டுக்குள் அதிகாரம் பகிரப்படும் என்று தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு மூத்த அரசியல்வாதியிடமி ருந்து இவ்வாறான வெளிப்பாடு வரக்கூடாது.

ஜனாதிபதியும், பிரதமரும் இலங்கையின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நாட்டை ஒன்றுமைப்படுத்த நினைக் கும்போது மஹிந்த இனவாதத் தைத் தூண்டும் வகையில் செயற்படுகிறார்.

மஹிந்த ராஜபக்ஷ அதி காரத்தில் இருக்கும்போது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக் குழு, சர்வக்கட்சி மாநாடு, பல் லின நிபுணர் குழுக்கள் மூலம் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டி ருந்தன.

பல்லின நிபுணர்களை உள்ளடக்கிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் அவர் கூறியதாவது:–

எமது குறிக்கோள் பிரிக்கப் படாத இலங்கையில் ஒருதீர்வை ஏற்படுத்தவேண்டும். மக்கள் தமது சுயநிர்ணயத்தின் அடிப்படையில் நிலங்களில் அவர்களின் அரசியல் பொருளா தாரத்தைத் தீர்மானிக்க வேண் டும். பலவருடங்களாக மத்தியில் அதிகாரம் இருப்பது அச்சுறுத்த லானது. அதிகாரப் பகிர்வு பொருளாதாரச் சமூகத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். எந்தத் தீர்வு என்றா லும் அதிகூடிய அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்த பெரும்பானமை சமூகம் முந் திக்கொள்வார்கள் எனக் கூறி யிருந்தார்.

அன்று சொன்னதை இன்று செய்கிறோம்

நான் மரியாதையாகக் கூறிக்கொள்ள விரும்புகின் றேன். நீங்கள் அன்று சொன் னதைத்தான் இன்று செய் கின்றோம். அனைத்து மக் களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன் நிறைவேற்றுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட்டு அங்கீகரிப்பட வேண்டும். இனவாதத்தைப் பேசி மஹிந்த நட்டைப் பிளவுப்படுத்த நினைக்கிறார் என்று எவரும் கூறவில்லை.

இதேவேளை, 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் பான் கீ மூனும் மஹிந்தவும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

அதில் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும், அவர்க ளது அபிலாகைளுக்குத் தீர் வான்நிலைத்துநிற்கக்கூடியசமா தானத்தையும் பொருளாதார சமத்துவத்தையும் ஏற்படுத் துவேன் எனக் கூறியிருந்தார்.

அத்துடன், 13 ஆவது திருத் தச் சட்டத்தில் இருந்து அனைத் துக் கட்சிகளை உள்ளடக்கி நிலையான சம்மதானத்தை ஏற்படுத்தும் அதிகாரப் பகிர் வுக்குச்செல்வதாகவும்மஹிந்த கூறினார்.

2009ஆம் ஆண்டு ஐ.நா. செயலாளருடன் இணைந்து குறிப்பிட்ட விடயத்தைத் தான் நாங்கள் இப்போது செய்ய முயற்சிக்கின்றோம்.

மஹிந்தவிடம் கேட்கிறேன், அரசமைப்புக்கு எதிரானவர் என்றால் 2016ஆம் ஆண்டு நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக மாற்றப்படும் போது ஏன் எதிர்ப்பு வெளியிட வில்லை. தற்போது மட்டும் இன வாதத்தைத் தூண்ட முற்ப டுகின்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதில் வெற்றிபெற வேண்டிய தேவை உள்ளது. அரசைத் தோற்கடித்து அதிகாரத்துக்கு வரவேண்டிய தேவையும்உள்ளது. அதற்காக இனவாதத்தை மஹிந்த தூண்டிவிடப் பார்க்கிறார்.

மஹிந்தவின் ஒத்துழைப்பு தேவை

மஹிந்தவின் ஒத்துழைப்பு எங்களுக்கு அவசியம். மூத்த அரசியல்வாதி நீங்கள். மக்க ளின் நன்மதிப்பைப் பெற்றவர். நீங்கள் இதில் பங்குகொள்ள வேண்டும் என்று மக்கள் ஆசைப்படுகின்றனர். நீங்க ளும் ஆதரவு வழங்கவேண்டும் – என்றார்.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

அறிவிக்கப்படாத தேர்தலுக்கு தயாராகும் வேட்புமனு!

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. அடுத்து வரும் வாரங்களில் அது பற்றிய அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடும் எனக் கூறப்படுகின்றது.

அப்படி அறிவிப்பை விடுத்தாலும் கூட, அந்தத் தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையம் சில சிக்கல்களை எதிர்நோக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது. அத்தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள், தேர்தல் சட்டம் போன்றவற்றில் இன்னும் குழப்பங்கள் உள்ளன என ஆணையம் கருதுகின்றதாம். உள்ளூராட்சித் தேர்தல் புதிய திருத்தச் சட்டத்திலும், அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களிலும் சிங்கள, தமிழ், ஆங்கில வடிவங்களுக்கு இடையில் முரண்பாடுகள், தெளிவின்மைகள் காணப்படுகின்றனவாம். ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி தேர்தலை எப்படியும் நடத்தி முடிக்கத் தேர்தல் ஆணையம் கங்கணம் கட்டி நிற்கின்றது.

ஆனாலும், இந்தக் குழப்பங்களைக் காட்டி - முன்நிறுத்தி - தேர்தலை நடத்தாமல் தடுக்கும் நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கான முன்முயற்சிகளில் சில தரப்புகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன.

இந்தத் தேர்தலை எப்படி அணுகுவது என்பது குறித்து ஆளும் தரப்புக்குள் - குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள் - இன்னும் குழப்ப நிலைமை நீடிக்கவே செய்கின்றது. அக்கட்சி திட்டவட்டமான - தெளிவான - ஒரு நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவேயில்லை.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியை அரவணைத்து ஒரே சுதந்திரக் கட்சியாக இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கு சு.க. தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயார் என அரசின் - அமைச்சரவையின் - பேச்சாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர கூறியிருக்கின்றார்.

அதேபோன்ற கருத்தை மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவும் கூறியிருக்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சுதந்திரக் கட்சியை உடைக்காமல் சேர்ந்து போகவே விரும்புகின்றனர். அது குறித்துப் பேசி இணக்கநிலையை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கான பொறுப்பையும் அனுமதியையும் சு.கவின் மாகாண முதலமைச்சர்களுக்கு ஜனாதிபதி வழங்கியிருக்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆக, உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா என்பது இன்னும் தெளிவில்லை.

நடப்பதற்கான அறிவித்தல் வந்தாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும் தனித்தனி வழி போகுமா அல்லது இரண்டும் சேர்ந்து போகுமா என்பது கூட இன்னும் தெளிவில்லை.

இன்னும் தேர்தலுக்கான அறிவிப்புக் கூட வரவில்லை. வழிகாட்டல் அறிவிப்பைத் தேர்தல் ஆணையம் விடுக்க, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை அமைந்திருக்கும் மாவட்டத்தின் செயலாளரான - தெரிவத்தாட்சி அலுவலரே உத்தியோக பூர்வ அறிவிப்பை விடுக்க வேண்டும். அது பெரும்பாலும் இம்மாத இறுதியில்தான் நடக்கும் என்று கூறப்படுகின்றது.

ஆனால், அதற்கு இடையில் - உள்ளூரில் - தென்னிலங்கை பௌத்த - சிங்கள தீவிரவாதக் கட்சிகளின் 'கூசாத்தூக்கிகள்' இங்கு தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டனர்.

தேர்தல் அறிவிப்பு வரவில்லை. நியமனப் பத்திரம் - வேட்புமனு - கோரப்படவில்லை. ஆனால், உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பு மனுவில் வேட்பாளர்கள் ஒப்பமிடும் நிகழ்வை மஹிந்தவின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ் அடிவருடிகள் ஆரம்பித்து விட்டனர்.

இருபத்தைந்து, ஐம்பது பேரை ஒரிடத்தில் கூட்டி, பொஜன பெரமுனவின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் வேட்புமனு பத்திரத்தில் ஒப்பமிடும் காட்சியை முகநூலில் பரவவிட்டிருக்கின்றது அந்தத் தரப்பு.

வேட்பு மனுக் கோரப்பட முன்னரே ஒப்பமிடப்படும் வேட்புமனு பின்னர் சட்ட ரீதியாகச் செல்லுபடியாகுமா என்பது ஒரு புறமிருக்க -

தேர்தல் அறிவிப்பதற்கு முன்னரே இத்தகைய 'திருவிளையாடல்கள்' அவசியம் தானா என்பதுதான் கேள்வி.

தேர்தலுக்கான முன்னாயத்தங்கள் செய்வது வேறு. கட்சியை சீரமைத்து, உறுப்பினர்களை ஒன்று திரட்டி, உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி, ஒரு சுறுசுறுப்பை ஏற்படுத்துவது வேறு. அப்படி கட்சி புதுவேகம் கொண்டு செயற்படுவதாகக் காட்டிக்கொள்வதும் கூட ஓர் அரசியல் தந்திரோபாயம்தான்.

குறைந்தபட்சம், வேட்பாளராகக் களத்தில் குதிப்பதற்குப் பலர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்து விண்ணப்பம் கொடுக்கின்றார்கள். அதற்கு முண்டியடிக்கின்றார்கள் என்று கூறுவது - அல்லது காட்டுவது - கூட ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

ஆனால், அதற்காக இன்னும் அறிவிக்கப்படாத தேர்தலுக்காக வேட்புமனுவில் ஒப்பமிடுவதாகக் காட்டுவது Too much ... இல்லாத நாடகத்தில் எழுதாத பாத்திரத்துக்கு நடிக்கும் வேலை இது...!!

குற்றமிழைக்காத இராணுவத்தினருக்காக ஜனாதிபதியுடன் அரசாங்கம் முன்நிற்கும்

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்றால் போல் செயற்படத் தயாராக இல்லை என ஜனாதிபதி தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட மேல் மாகாண முதலமைச்சர், சட்டரீதியாக குற்றமிழைக்காத இராணுவத்தினருக்காக ஜனாதிபதியுடன் அரசாங்கமும் உடனிருக்கும் எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனவாதிகளாக முன்நிற்பவர்கள், இனவாத நோக்கத்துடன் இருந்துகொண்டு அரசியல் செய்பவர்கள் சில அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு இராணுவ அதிகாரிகளை தொடர்புபடுத்தி பல்வேறு மட்டங்களில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இராணுவத்தினருக்கு காணிகளை வழங்குவதாக ஒருதரப்பினர் குறிப்பிடுகின்றனர். அல்லாவிடின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என குறிப்பிடுகின்றனர். யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்ட இராணுவத்தினரை சிறைக்கு அனுப்பி, அநீதி இழைப்பதாக குற்றஞ்சாட்டுகின்றனர். தெளிவாக ஒன்றைக் கூறவேண்டும்.

சட்டரீதியான குற்றவாளிகள் அல்லாத அனைத்து இராணுவ வீரர்களுக்காகவும் ஜனாதிபதியுடன் அரசாங்கமும் முன்நிற்கின்றது. சர்வதேசத்திற்கும் இந்த நாட்டு மக்களுக்கும், பொறுப்புமிக்க தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ஒன்றைத் தெளிவாக கூறியுள்ளார். அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கேற்றால்போல் செயற்படுவதற்கு தாம் தயாராக இல்லை என்பதை ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளார்.

விசேடமாக இராணுவத்தினருக்காக, இராணுவத்தினரின் உரிமைகளுக்காக, இராணுவத்தினரின் எதிர்காலத்திற்காக அரசாங்கம் என்ற வகையிலும் நாட்டின் தலைவர் என்ற வகையிலும் அந்தப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் தற்போதைய ஜனாதிபதி நியமிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த நிலைமை மற்றும் தற்போது இருக்கும் நிலைமை குறித்தும் மீண்டும் மீண்டும் கூற வேண்டிய அவசியம் இல்லை.

இராணுவத்தைத் தூண்டி, இனவாதத்தைத் தூண்டி, வடக்கு கிழக்கு பிரச்சினையை தூண்டி தொடர்ச்சியாக தெற்கிலுள்ள அரசியல்கட்சிகள் இனவாதத்தை மீண்டும் பற்றவைத்து இந்த நாட்டின் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் பகையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

மாகாண முதலமைச்சர் என்ற வகையில் கொழும்பிலுள்ள முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களை உரிய முறையில் நடத்துகின்றேன் என்று அவர் குறிப்பிட்டார். (க)

கிளிநொச்சி சிறுவர் இல்லத்தை விட்டு ஓடிய சிறுவர்கள்!



கிளிநெச்சி, நவ. 17

கிளிநொச்சி - திருவையாறு பகுதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து நேற்றிரவு ஐந்து சிறுவர்கள் இல்லதைவிட்டு வெளியேறியமையால் பிரதேசத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சிறுவர் இல்லத்திலிருந்து வெளியேறி அயலில் உள்ள காணிகளில் ஒழித்திருந்த நிலையில், கிராமத்து இளைஞர்கள் குறித்த சிறுவர்களை மீட்டு விசாரித்த போது சில விடயங்கள் தெரியவந்துள்ளன.

இந்த இல்லத்தில் தங்களுக்குப்பொறுப்பானவர்கள் தாக்கியதனால் தாங்கள் சிறுவர் இல்லத்திலிருந்து ஓடி வந்து விட்டோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இரவு ஒன்றுகூடலுக்கு தாமதமாகியும் செல்லாத காரணத்தினால் தங்களுக்கு கடுமையாக அடி விழுந்தது என்றும் அந்தச் சிறுவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு ஒரு சிறுவன் தனது கையில் ஏற்பட்ட காயத்தை காட்டி, அடித்ததால் ஏற்பட்ட காயம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த சிறுவர் இல்ல ஊழியர்கள் தாங்கள் சிறுவர்களைத்தாக்கவில்லை என்றும் இரவு ஒன்றுகூடலுக்கு சிறுவர்கள் சமுகம் தராது மரங்களில் ஏறியிருந்தனர் எனவும் சிறுவர்களை ஒன்று சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின் போதே சிறுவர்கள் இல்லத்தை விட்டு ஓடினர் எனவும் குறிப்பிட்டனர்.

அத்துடன், ஒரு சிறுவனின் கையில் ஏற்பட்ட காயம் அவர் மரத்திலிருந்து இறங்கும் போது ஏற்பட்ட காயம் என்றும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மாவட்ட சிறுவர் நன்நடத்தை அதிகாரிக்குத் தகவல் அனுப்பப்பட்டு அவர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததோடு சிறுவர்களை மீண்டும் சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்.

மேலும், தான் நேற்றைய தினம் இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் குறிப்பிட்டார். (க)

நாளை
18.11.2017
சனிக்கிழமை
நட்சத்திரம் : விசாகம் மு.இ. 8.03 வரை
திதி : அமாவாசை பி.ப. 5.15 வரை
சுபநேரம் : 03.08 – 04.38 வரை
இராகுகாலம்: 09.08 – 10.08 வரை

இலங்கை மீதான சித்திரவதைக் குற்றச்சாட்டு:

தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கிறது அமெரிக்கா!

கொழும்பு, நவ. 17

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள சித்திரவதை மற்றும் பாலியல் வதைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கரிசனை கொண்டுள்ளதாகவும், இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அண்மைக் காலத்தில், தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் தொடர்பாக, ஏ.பி. வெளியிட்ட ஆய்வு அறிக்கை குறித்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர், ஏபி செய்தி நிறுவனத்திடம் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைப் பாதுகாப்புச் சேவைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது.

சித்திரவதைகள், வல்லுறவுகள், பாலியல் வன்முறைகள், உலகில் எங்கு நடந்தாலும், அதனை அமெரிக்கா கண்டிக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, விசாரணைசெய்யும், இலங்கை அரசின் அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பான அனைவரையும் தாமதமின்றி, பொறுப்புக்கூற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் மீதான சித்திரவதை குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் இலங்கையின் பாதுகாப்புச் செயலர்!

கொழும்பு, நவ. 17

தமிழ்ப் போராளி சந்தேக நபர்கள் மீது சித்திரவதைகள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார். இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, இது ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோருவதற்காகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில், தற்போதைய ஆட்சிக்காலத்தில், கைது செய்யப்பட்ட 50 இற்கும் அதிகமானோர் சித்திரவதை செய்யப்பட்டனர் என்றும் பாலியல் ரீதியான வதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அண்மையில் ஏ.பி. செய்தி நிறுவனம் ஓர் ஆய்வு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

ஐ.நா. அமைதிப்படை பாதுகாப்பு அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பங்கேற்க கனடாவின் வன்கூவர் நகருக்கு வந்திருந்த, இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவிடம் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஏ.பி. செய்தி நிறுவனம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. ஆதாரமற்றவை.

பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் விடயத்தில், இலங்கை அரசு சகிப்புத்தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

இலங்கை அரசு எல்லாக் குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரித்துள்ளது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடிவடைந்து, அவை மூடப்பட்டு விட்டன.

சிலவேளைகளில் நட்புக் கரங்களால் கூட இவை நிகழ்கின்றன. அவர்கள் கூறுவதன் அடிப்படையில் மாத்திரம், குற்றச்சாட்டுகளைக் கருத்தில் கொள்ளக் கூடாது. ஏனையவர்களின் கருத்துக்களையும் அறிய வேண்டும். இதனைக்கவனத்தில்கொள்ளவேண்டும்.

ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருந்தால், இலங்கை அரசு சுதந்திரமான விசாரணையை வரவேற்கும்.

இந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இலங்கைக்கான உதவிகள் குறைக்கப்பட வேண்டும் என்று கோருவது நியாயமற்றது.

இது ஒரு பகுதி மக்களுடன் தொடர்புடைய விடயம் அல்ல. இது எல்லோருக்குமானது. நிதி உதவிகள் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுக்கு உரியதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்; பெண்களுக்கான மாபெரும் நடை பவனி!

கொழும்பு, நவ. 17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பெண்களுக்கு 25 சத வீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியமையை அடையாளப்படுத்தும் நோக்கில் பெரிய நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

கொழும்பு - விகாரமாதேவிப் பூங்காவிலிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை மாலை மூன்று மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபவனி, மாலை நான்கு மணியளவில் சுதந்திர சதுக்க வளாகத்தைச் சென்றடைந்தது..

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா இந்த நடை பவனியை வழி நடத்திச் சென்றார்.

இந்த நடைபவனியில் பெருந்திரளான பெண்கள் கலந்துகொண்டனர்.

இறுதியில், இது தொடர்பிலான விசேட வைபவம் ஒன்று, கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இரவு 7 மணியளவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

உள்ளூராட்சி மன்றங்களில், பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும் என்று, சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற வைபவத்தின் இறுதியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் பைஸர் முஸ்தபா வலியுறுத்தினார்.

நீதிமன்ற நடவடிக்கை மூலம் தேர்தலை தள்ளிவைக்க முயற்சி

கொழும்பு, நவ.17

நீதிமன்ற செயற்பாட்டின் ஊடாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதே கூட்டு எதிர்க்கட்சியின் நோக்கமாகும் என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகவும் இம்முறை வரவு- செலவுத் திட்டம் தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமை அனைவருக்கும் உண்டு . அதையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்காக கூட்டு எதிர்க்கட்சியினரை சேர்ந்த சிலர் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

எல்லைநிர்ணய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டபோது தேர்தல் நடத்தப்படவேண்டும் அதற்கு வழிசெய்யவேண்டும் என்று குரல்எழுப்பியவர்கள் கூட்டு எதிர்க்கட்சியினரே.

தேர்தலை நடத்துவதற்குத் தற்பொழுது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பொழுது. அவர்கள் தமது கைக்கூலிகளைப் பயன்படுத்தி தேர்தலுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

தம்பலகாமத்தில் நேற்று

திருகோணமலை, தம்பலகாமம் அரசினர் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாகப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

பிரதேசத்தின் மூவினத்தையும் சேர்ந்த மதகுருமார்கள், பெண்கள், இளைஞர்கள் உட்படப் பொதுமக்கள் எனப் பலரும் இணைந்து இப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தம்பலகாமம் அரசினர் பிரதேச வைத்தியசாலை 24 மணித்தியாலமும் திறக்கப்பட்டு சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், வைத்தியர் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை மற்றும் நோயாளர் காவு வண்டிகளின் பற்றாக்குறை போன்ற தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்து இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், வைத்தியசாலையைத் தரமுயர்த்தக் கோரியும், நோயாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் பல கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்துள்ளனர்.

(ப)

சுனாமி பீதியை ஏற்படுத்தி தங்கச் சங்கிலி அபகரிப்பு

சுனாமி என்று பீதியை ஏற்படுத்தியதும், பயந்து வீதிக்கு ஓடிவந்த பெண்ணொருவர் தனது தங்கச் சங்கிலியைத் திருடர்களிடம் பறி கொடுத்த சம்பவம் பாண்டிருப்பில் நடந்துள்ளது.

கிழக்கின் கரையோரப் பிரதேசம் எங்கும் மக்கள் மத்தியில் மீண்டும் சுனாமி ஏற்படப் போகின்றது என்கிற அச்சம் எழுந்தமையைத் தொடர்ந்து கரையோரப் பிரதேசத்து மக்கள் மத்தியில் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகத் திருடர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஒரு சிலர் வேண்டுமென்று வீதியில் சுனாமி வருது சுனாமி வருது என சத்தமிட்டவாறு வீதியில் ஓடியுள்ளனர். அதனைப் புதினம் பார்க்க வீதிக்கு ஓடிவந்தவர்களில் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த காலங்களிலும் மக்கள் மத்தியில் சுனாமிப் பீதியை கிளப்பிவிட்டு வீடுகளில் திருட்டுச் சம்பவத்தில் திருடர்கள் ஈடுபட்டனர். பொது மக்கள் சுனாமி வதந்திகள் பற்றித் தேவையில்லாது அச்சப்பட வேண்டாம் எனப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஓட்டமாவடிப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸார் 23 வயதுடைய இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து 150 போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

விபத்து இருவர் படுகாயம்

திருகோணமலை, மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்து சேறுநுவர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தங்கநகர்ப் பகுதியில் ஓட்டோ ஒன்றை மோட்டார் சைக்கிள் ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது.

மேலும் விபத்தின்போது ஓட்டோ சாரதியும், மோட்டார் சைக்கிளின் சாரதியுமே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என சேறுநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வறுமை ஒழிப்பு செயலமர்வு

மட்டக்களப்பு, நவ.17

ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக வறுமை ஒழிப்பு, போசாக்குத் தன்மையை மேம்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .

இதன் கீழ் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய வறுமை ஒழிப்பு, போசாக்குத் தன்மையை மேம்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவ வேலைத்திட்டங்கள் தொடர்பாக பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜுதிஸ்குமார் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் செயலமர்வு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது .

இந்தச் செயலமர்வில் ஆலோசகராகப் பிரதேச செயலக கணக்காளர் கே .ஜெகதிஸ்வரன் கலந்து கொண்டு வறுமை ஒழிப்பு, போசாக்குத் தன்மையை மேம்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்.

இந்தச் செயலமர்வில் மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பில் விமானிகளுக்குப் பயிற்சிப் பாடசாலை

மட்டக்களப்பு விமான நிலையத்தில் தேசிய விமான சேவைகள் கட்டுப்பாடு மற்றும் விமானம் செலுத்துவது தொடர்பான பயிற்சிப் பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

சிவில் விமான சேவை தொடர்பில் சாதகமான பல விடயங்களை கொண்டுள்ள மட்டக்களப்பு விமான நிலையத்தில் தேசிய விமான சேவைகள் தொடர்பில் அக்கறை கொண்டு அது தொடர்பான தரப் பினரிடத்தில் இருந்து யோசனைகள் கோரப்பட்டன.

இது தொடர்பில் M/s Skurai Aviation நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்டது. இந்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இப்பிரதேசத்தில் நிலவும் பொருத்தமான காலநிலை மற்றும் சிவில் விமான நடவடிக்கைகள் காரணமாகவும் மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து சுமார் 150கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளமையால் நெருக்கடியற்ற விமான சேவையை மேற்கொள்ளமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு அமைவாக தேசிய சிவில் விமான சேவைத் தொழிற்றுறையில் ஏற்படக்கூடிய பெரிய வளர்ச்சியில் கிழக்கு மாகாணப் பொருளாதாரச் செயற்பாடு குறிப்பிடத்தக்கவகையில் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமை கடப்பாடுகளை ஒரே இரவில் நிறைவேற்ற முடியாது!

ஜெனிவா மாநாட்டில் இலங்கை தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றும் பணிகளை ஒரே இரவில்செய்துவிடமுடியாது.

உலகில் எந்தவொரு நாடும், இந்தவிடயத்தில் சரியாகச் செயற்படும் நிலையில்இல்லைஎன்று இலங்கையின் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள்பேரவையின்பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை பற்றிய மூன்றாவது மீளாய்வு அமர்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் மனித உரிமைகளை மீளமைப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

எனினும், இலங்கை போன்ற ஜனநாயக நாட்டில் மனித உரிமைகளை வேகமாக மீளமைக்க முடியாதுள்ளது.

உலகில்சவால்கள் இல்லாத நாடுகளே இல்லை. எந்தவொரு நாடுமே, சரியாகச் செயற்படும் நாடு அல்ல.

முழுமையான அர்ப்பணிப்புடன் இயங்கினாலும்கூட, மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அதைப் பாதுகாப்பதும்ஒரேநாளில்நடந்துவிடக் கூடியது அல்ல.

மனித உரிமைகளை முழுமையாக அமுல்படுத்துவது குறித்த எமது முயற்சிகள்மீதான சர்வதேசத்தினது விமர்சனங்களை வரவேற்கிறோம்.

எமது செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடவும் நாம் தயாராக உள்ளோம்.

ஆனால், எமது இந்த முயற்சியை சர்வதேசத் தலையீடுகளின் மூலம் குழப்புவதற்குச்சில சக்திகள் இயங்குகின்றமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனினும், மனித உரிமைகளை முழுமையாக நாட்டில் நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு முழுமனதுடன் உழைக்கும்.

மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை, பாதுகாப்புப் படையினரை இலக்குவைத்ததாக - எமது நாட்டிலுள்ள சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். இது துரதிஷ்டவசமானது; முற்றிலும் தவறானது.

பாதுகாப்பு படையினர் நியாயமற்ற முறையில் இலக்குவைக்கப்படவோ, தண்டிக்கப்படவோமாட்டார்கள் என்று இலங்கை ஜனாதிபதி அண்மையில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

எனினும், சட்ட மீறல்கள் தொடர்பாக, நீதித்துறைசெயல்முறைகளின் ஊடாக,விசாரணைகளை மேற்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம்.

மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காக, அரசமைப்பு மறுசீரமைப்புமுயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதியுடன்உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொண்டமான் பெயர் விவகாரம்; இந்தியா கவனம் செலுத்தும்!

சுஷ்மா ஸ்வராஜ் டுவிட்டரில் தகவல்

தொண்டமானின் பெயரை நீக்கிய விவகாரம் குறித்து இந்தியா கவனம் செலுத்தும் என அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து மு.க. ஸ்டாலின் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில். தனது டுவிட்டர் கணக்கில் சுஷ்மா ஸ்வராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஹட்டன் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயரில் இருந்து தொண்டமானின் பெயர் நீக்கப்பட்டமை பற்றி சுஷ்மாவுக்கு கடிதம் மூலம் தனது அதிருப்தியை ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

அதில், தமிழ் தொழிலாளர்களின் உரிமைக்காகவும், நன்மதிப்புக்காகவும் உழைத்த முதுபெரும் தலைவர் தொண்டமானின் பெயரை அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் இருந்து நீக்கியமை அநீதியான செயல் என்றும் திட்டமிட்டே இந்த இருட்டடிப்பின் மூலம் இந்தியாவின் மீதான நன்மதிப்பையும் களங்கப்படுத்தியுள்ளது என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். சமூக மேம்பாட்டுக்காகப் போராடிய தலைவர்களின் பெயரும் புகழும் எந்த வகையிலும் யாரும் பாழ் படுத்தக்கூடாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தங்க நகைகளைக் கடத்தி வந்தவர் கைது!

கொழும்பு, நவ. 17

சிங்கப்பூரிலிருந்து சட்ட விரோதமாகத் தங்க நகைகளை இலங்கைக்குக் கடத்தி வந்தவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனது கைப்பையினுள் வைத்து சுமார் 127.36 கிலோகிராம் தங்க நகைகளைக் கடத்தி வந்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி 6 லட்சத்து 36 ஆயிரம் ரூபாவாகும் எனக் குறிப்பிடுகின்றனர்.

40 வயதான இந்த சந்தேகநபர் கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20. அராலி வீதி. ஆதன இல 84/7 என்ற இலக்கம் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முஸ்லிம் வட்டாரம் இல.38, கலீபா அப்துல் கமீது வீதியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமட் நிஜாம் மொகிதீன், பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2415/2004.10.04 ஆம் இலக்க திகதியிட்டு வெளிப்படுத்தல் உறுதியில் 1920ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனம் தனது பிதா வழிப்பேரன் சுல்தான் மொகிதீன் அவர்களுக்கு சொந்தமும் ஆட்சியுமாயிருந்து அவர் காலமாகிவிட ஏக வாரிசான தனது பிதா சுல்தான் மொகிதீன் அப்துல் கரீம் அவர்களுக்கு முதுசமும் ஆட்சியுமாயிருந்து 1966இல் தனது பிதா காலமாகி விட அவ் ஆண்டிலிருந்து இவ்வாதனத்தை தனது பிதா வழி முதுசமாக தான் நீண்டகாலமாக எவ்வித தடையுமில்லாது ஆட்சி செய்துவருவதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு ச.தங்கமாமயிலோன் முகதாவில் நிறைவேறிய 2306/14.03.2005 அறுதி உறுதி மூலம் இதே முகவரியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமட் நிஜாம் மொகிதீன் யாழ்ப்பாணம், ஓட்டுமடம், மானிப்பாய் வீதி, இல.611 கணேசபிள்ளை சண்முகலிங்கத்திற்கு அறுதியாக விற்றுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 2355/10.06.2005 இலக்க அறுதி உறுதி மூலம் கணேசபிள்ளை சண்முகலிங்கமும் பெண் இராஜேஸ்வரியும் கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கை மரியநாயகம் ஸ்ரீதரனுக்கும் பெண் பிறேமேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார். ஆதன விவரம்:- வண்ணார்பண்ணை மேற்கிறை 'இராசாளிக்குளக்கரை வயல்' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.A.இளையதம்பி அவர்களின் வரைபட இல. 1043/2016.04.05 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நெ.பர.11குளி 08.86 ஆகும். இதன் எல்லை

வடக்கு:- அப்துல் கரீம் மகள் முசாமில்லாவின் ஆதனம்
கிழக்கு:- 15 அடி ஒழுங்கை
மேற்கு:- பரீனா பேகம்பின் ஆதனம்
தெற்கு:- இராமலிங்கம் சதீஸ்குமாரினதும், தேவராஜ் பெண் ருக்குமணியினதும் ஆதனம்

தற்போது ஸ்ரீதரன் பெண் பிறேமேஸ்வரி இவ் வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஸ்ரீதரன் பெண் பிறேமேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்
கலைமாணித் தேர்வு பகுதி - II - 2014(வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 04.12.2017(திங்கட்கிழமை) தொடக்கம் 20.12.2017 (புதன்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
பரீட்சை தொடர்பான நேர அட்டவணையை எமது இணையத் தளத்திலும் (www.codl.jfn.ac.lk) எமது முகப்புத்தகப் பக்கத்திலும் (www.facebook.com/uoj.codl) பார்வையிடலாம்
பரீட்சை அனுமதி அட்டைகளை 28.11.2017(செவ்வாய்க்கிழமை) தொடக்கம்30.11.2017(வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விவரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
15.11.2017

காலைக்கதிர் Kalaikkathir

50 ஆவது ஆண்டு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று

வடமராட்சி, நவ.17

புத்தூர் மடிகே பஞ்சசீக வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் 50 ஆவது ஆண்டு விழாவும் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்ட பத்தில் அதிபர் திருமதி.எஸ்.கணேசானந்தன் தலைமை யில் இடம்பெறும்.

இவ்விழாவில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகவும் யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, தர்மவிஜய அமைப்பின் தலைவர் எம்.டி.டபிள்யூ. ஆரியவன்ச ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப் பாளர் என்.சிவநேசன், தர்மவிஜய அமைப்பின் செயலாளர் எச்.பி.பிரேமரத்ன ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக வும் கலந்துகொள்வர். (இ)

தினசரி ராசி பலன் 17.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 2 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. சதுர்த்தசி திதி பகல் 3.30 மணிவரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம் சுவாதி மாலை 5.10மணிவரை பின்னர் விசாகம். சித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - *பகல் 10.28 மணிமுதல் 11.55 மணிவரை.*

சுபநேரம் - *காலை 6.13 மணிமுதல் 7.43 மணிவரை.*

திவசம் செய்ய வேண்டிய திதி - *கார்த்திகை மாத தேய்பிறை சதுர்த்தசி.*

பிறந்த நட்சத்திர வழிபாடு: *சுவாதி.*

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம்: சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரம் சுமாராக நடக்கும்.

ரிஷபம்: இன்பமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். பெண்களுக்கு விரும்பிய மணவாழ்க்கை அமையும்.

மிதுனம்: யோகமான நாள். பணம் பலவழிகளிலும் வந்து சேரும். குடும்ப உறவில் அன்பும், பண்பும் நிறைந்து காணப்படும். மாணவர்களுக்கு உயர் கல்விக்காக சிறந்த கல்லூரி அமையும்.

கடகம்: கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் குழப்பநிலை உண்டாகும். உறவினர் களால் உபத்திரம் உண்டாகும். தேக நிலை பாதிப்படையும்.

சிம்மம்: மத்திமமான நாள். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் அமைதி பேணப்படும். உடலாரோக்கியம் குன்றும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். பயணத்தின்போது அவதானம் தேவை.

கன்னி: உயர்வான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலலோங்கும். உத்தியோகத்தர்களின் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் அமோக லாபம் வரும்.

துலாம்: மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும்.

விருச்சிகம்: சஞ்சலமான நாள். வருமானம் குறைந்து காணப்படும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். செய்யும் தொழிலில் இடையூறுகள் ஏற்படும்.

தனுசு: யோகமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். வீடு, காணி வாங்கும் யோகம் உண்டாகும். வேலை தேடுவோருக்கு நல்ல வேலை கிடைக்கும்.

மகரம்: சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருவாய் குறையும்.

கும்பம்: நன்மையான நாள். பணவரவு சரளமாக இருக்கும். தொட்ட காரியத்தில் அனுகூலமும் வெற்றியும் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள். கௌரவம், புகழ் உயரும்.

மீனம்: சலனமான நாள். உடலில் சோம்பலும், அசதியும் இருக்கும். பொருளாதாரம் நலிவடையும். தொழிலில் போட்டி, பொறாமை மறைமுக எதிர்ப்பு நிலவும். பெண்களால் மனக்கஷ்டம் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுபகருமங்களைத் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்

யாழில் தேங்கியிருக்கும் வெள்ளநீரை உடனடியாக வெளியேற்ற முடியாது!

யாழ். அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணத்தில் தேங்கியிருக்கும் வெள்ளநீரை உடனடியாகக் கடலுக்குள் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப் பாளர் எஸ்.ரவி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளின் சில பகுதிகளில் நேற்றுமுன் தினமும் மழை பெய்துள்ளது.

இந்த நிலையில், தேங்கி நிற்கும் வெள்ளநீரை உடனடியாகக் கடலுக்குள் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது. குடிதண்ணீர் மற்றும் விவ சாய நடவடிக்கைகளை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். தீபகம் மழை நீரின் மூலமே குடிதண்ணீர் மற்றும் விவசாய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டியுள்ளது.

கடந்த வருடத்தில் குறிப்பிட்ட அளவில் மழைவீழ்ச்சி இடம்பெறாததினால் விவசாயம் மற்றும் குடிதண்ணீர் பிரச்சினையை மக்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

நாவற்குழி , கைதடி பகுதியில் புதிய ரயில்வே பாதைக்கான நிர்மாணப்பணிகள் இடம் பெற்று வருகின்றன. இதனால், இங்குள்ள அணைக் கட்டுக் கதவுமூடப்பட்டுள்ளது. இதனை கருத்தில்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமையால் வெள்ள நீர் வடிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மேலும், சமீபகாலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் சட்டத்திற்கு முரண்பட்ட வகையில் கட்டடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இந்த கட்டட நிர்மாணப் பணிகளால் கால்வாய்களில் நீர் செல்வதில் தடையேற்பட்டுள்ளது. இந்த வெள்ளநீர் உடனடியாக வடியாமைக்கு காரணமாகும்.

இதன்காரணமாக சில பகுதிகளில் வீட்டின் வளாகங்களிலும் போக்குவரத்து பாதைகளிலும் தொடர்ந்தும் வெள்ளநீர் இருந்துவருகின்றது.

மழைக்காலங்களில் கடல் நீர் நிலப்பகுதிக்கு வராத வகையிலும் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு பகுதியினர் விவசாய பயிரை பாதுகாப்பதற்காக நீரை திறந்துவிட வலியுறுத்துகின்றனர். குடிதண்ணீரைக் கருத்தில் கொண்டு இந்த கோரிக்கையை உடனடியாக எம்மால் மேற் கொள்ள முடியாது.

யாழ். மாவட்ட பொதுமக்களின் குடிதண்ணீருக்கான பொதுவான முகாமைத்துவம் இல்லாமையினாலேயே வேறட் சிக்காலங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாசிப்பு மாதப் போட்டி; இன்று பரிசளிப்பு

கிளிநொச்சி, நவ.17

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை பொது நூலகத்தால் நடத்தப்பட்ட வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இதில் கண்டாவளை பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் உள்ளிட்டோர் 'கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

தமிழ்த்தினப் போட்டிகளில் சாதனை புரிந்தோருக்கு இன்று மதிப்பளிப்பு

சாவகச்சேரி, நவ.17

தென்மராட்சி கல்வி வலய தமிழ் மொழிப் பிரிவால் வலய நிலைத் தமிழ்த்தினப் போட்டிகளில் சாதனைகள் படைத்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் தமிழ்த் தினப் போட்டிகளில் சாதனை படைத்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்கள் மற்றும் தேசிய நிலையில் எழுத்தாக்கப் போட்டிகளில் பதக்கம் பெற்ற 3 மாணவர்கள் ஆகியோருக்கான மதிப்பளிப்பு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

சா/த. மாணவருக்கான மீட்டற் பயிற்சி கருத்தரங்கு நாளை

தென்மராட்சி, நவ.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச தொடர்மீட்டற் பயிற்சிக் கருத்தரங்குகள் நாளை சனிக்கிழமை முதல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைப்பாடங்கள், தொகுதிப் பாடங்கள் தொடர்பான பயிற்சி வழிகாட்டல்கள் துறைசார் வல்லுநர்களால் நடத்தப்படவுள்ளன என கழகத் தலைவர் லயன் உ. சிசில் றெமிண்டஸ் தெரிவித்துள்ளார். முதலாவது மீட்டற் பயிற்சிக் கருத்தரங்கு - தமிழ் மொழிப் பாடத்துக்கான கருத்தரங்கு - நாளை மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடை பெறும். (இ)

மின் தடை அறிவித்தல்



உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை-

யாழ் பிரதேசத்தில் - நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைற்ரெட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் -

கிளிநொச்சிப் பிரதேசத்தில் - வெள்ளாங்குளப்பிரதேசம், கணேசபுரம் இராணுவமுகாம் -

வவுனியா பிரதேசத்தில் கற்பகபுரம் கிராமம், பம்பைமடு கிராமம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 08

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.

'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.

முதலாவது கம்பன் விழா 20.06.1980

திருகோணமலைக் கம்பன் கழக அங்குரார்ப்பணம் (31.08.1980)
வித்தியாதரன்

இக்கழகம் 1980 ஒகஸ்ட் 31 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்துக் கல்லூரியில் எங்களுடன் படித்த வித்தியாதரன், பின்னாளில் கழக முயற்சிகளில் எங்களோடு இணைந்தான். அக்காலத்தில் யாழில் மிகப் புகழ் பெற்றிருந்த, 'புட்போல்' விளையாட்டு வீரன் இவன். கல்லூரியை விட்டதும் சிந்தாமணிப் பத்திரிகையில் புகழ்பெற்ற எஸ்.ரி. சிவநாயகம் ஆசிரியரின் கீழ் இவன் பணிபுரிந்தான். எந்தவொரு காரியத்தை எடுத்தாலும் அந்தக் காரியத்தின் வெற்றிக்காக, தன்னை முழுதாய்த் தியாகம் செய்து பாடுபடுபவன் இவன். தன் விருப்பத்தை உலகத்தின் விருப்பமாக்கும் வித்தை தெரிந்தவன். எங்கள் கம்பன் கழகம் ஓரளவு செயற்படத் தொடங்கியிருந்தபோது, அவனுடனான நெருக்கம் அதிகரித்தது. அவன் பெற்றோர்கள் திருமலையில் இருந்தனர். அங்கு ஒரு கம்பன் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்ய முடிவு செய்து, எங்களை இவன் அணுகினான். அப்போது திருமலையில் புகழ் பெற்றிருந்த தமிழறிஞர் பெ.போ.சிவசேகரம் அவர்களைத் தலைவராகவும், ஜெயச்சந்திரன் அவர்களைச் செயலாளராகவும், வித்தியாதரனை அமைப்பாளராகவும் கொண்டு, அக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தேர்வுகள் எல்லாம் அவனின் முடிவுகளே. இப்போது சிவசேகரம் அவர்கள் மறைந்துவிட்டார். ஜெயச்சந்திரன் கனாடாவுக்குக் குடிபெயர்ந்து விட்டார். வித்தியாதரன் பிரபலமான பத்திரிகையாளனாக, உதயன், சுடரொளி பத்திரிகைகளில் ஆசிரியனாயிருந்து, உயிர் போய்விடும் அளவிற்கு, போராட்ட காலத்தில் பணியாற்றினான். இந்தியப் பத்திரிகைளும் இவன் எழுத்துக்களை விரும்பிப் பிரசுரித்தன. இவனது தமையனது திருமணத்திற்கு, எங்கள் கழகத்தின் மூன்றாவது அலுவலகம்தான் பெண் வீடாய் இருந்தது. நான் கந்தர்மடத்தில் வாடகை அறையில், கழக அலுவலகத்தை அமைத்திருந்தபோது, இவனது தம்பிமார் சிலகாலம் என்னோடு தங்கியிருந்து கல்வி கற்றனர். அந்தளவுக்கு இவனது குடும்பம் எங்களோடு நெருங்கியிருந்தது. இவனது ஒரே தங்கையைத் திருமணம் செய்த, இவனது மைத்துனரான உதயன் பத்திரிகை நிறுவுநர் சரவணபவன், பின்னாளில் எங்கள் கழகத்துக்குப் பெரியதுணை செய்தார். உதயன் பத்திரிகை ஆரம்பித்த பின்பு, இவனது கழகச் செயற்பாடுகள் குன்றிப்போயின. 1995 இடப்பெயர்வின் பின், சரவணபவன் எம்மோடு முரண்பட்டமையால், சிலகாலம் வித்தியாதரனும் பகையின்றி எமைவிட்டு விலகி இருந்தான். போர் முடிந்ததும் கூட்டமைப்பில் இணைந்து, நாடாளுமன்ற உறுப்பினராய் சரவணபவன் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் அரசியலில் நுழைய விரும்பாத வித்தியாதரன், பின்னர் அரசியலில் நுழைய ஆர்வப் பட்டான். ஆனால், அவன் முயற்சிகள் கைகூடவிலலை. பின்னாளில் கழகப் பணிகளில் இணையாவிட்டாலும், இன்றும் எங்களுடனான அவனது நட்பு இனிமையாய்த் தொடர்கிறது.

இரண்டாவது கம்பன் விழா (14.09.1980)

இந்த விழா 1980 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி, நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது. மாதாந்தம் விழா நடத்துவதென முடிவுசெய்து முயன்றபோதும், நடைமுறையில் அது சாத்தியப்படவில்லை. பெரு முயற்சியின் பின்னர்தான் இந்த இரண்டாவது விழா அரங்கேறியது. சுருவில் வர்த்தகர் திலகாஸ்ரோர்ஸ் கந்தையா அவர்கள் பொருளுதவி செய்தார். விழாவிற்காக ஆயிரம் ரூபாவை அவர் தந்தார். இவ்விழாவில், யாழ்ப்பாணத்தில் பெரும் புகழ் பெற்றிருந்த ஆசிரியர் தேவன் அவர்களுக்கு, 'சொல்லின் செல்வர்' எனப் பட்டமளித்துப் பாராட்டினோம். இவ்விழாவுக்கு யாழ். இந்துக் கல்லூரின் அப்போதையை அதிபர், பொ.ச.குமாரசாமி தலைமை தாங்கினார். நல்லை ஆதீனத்தின் இப்போதைய குருமுதல்வர், (அப்போது தம்பிரான்) கலந்துகொண்டார். ஆதீனப் பண்ணிசைப் புலவர் கணேசசுந்தரத்தின் திருமுறை ஓதலுடன் விழா ஆரம்பமாகியது.

தேவன் அப்பொழுது சுகவீன முற்றிருந்தார். யாழ். இந்துக்கல்லூரி உயர்தர ஒன்றிய வழக்காடு மன்றத்தில், அவரை நான் தோற்கடித்த பின்பு, சிலகாலம் என் மேல்அவரும் வெறுப்பாய் இருந்தார். இந்த விழாத்தான், அவர் அன்பை எனக்கு மீண்டும் ஆக்கித் தந்தது. குடிப் பழகத்தால் நோயுற்றிருந்த அவரைப் பாராட்டிப் பேசியபோது, "தேவன் எங்களுக்குத் தேவை,தேவனைத் தேவனாக விடமாட்டோம்" எனப் பேசினேன். விழா முடிந்த அடுத்தநாளே, நோய் கடுமையாகி வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். பின் நலமுற்று வெளி வந்தார். இவ்விழாவில்,புதியவர்களாய், பிரம்மஸ்ரீ சாம்பசிவக் குருக்கள், திருமலை பெ.பொ. சிவசேகரம்,திருமதி ஞா.குலேந்திரன், கவிஞர் அரியாலை ஜயாத்துரை, திருமலை ஜெயச்சந்திரன், திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். பட்டிமண்டபம்,கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தேவனுக்கிருந்த புகழால் இவ்விழாவுக்கு ஓரளவு கூட்டம் கூடியது.

ஆரம்பகாலத் தொண்டர்கள்

கழக முயற்சிகளில் காலத்திற்குக் காலம் பல இளைஞர்கள்,தன்னலமற்று, தொண்டர்களாய்ப் பணி செய்தனர். அவர்களிற் சிலர் எங்கள் நட்புக்காக மட்டும் இணைந்தவர்கள். வேறுசிலர் விழா சந்தோசத்துக்காக இணைந்தவர்கள். ஒரு சிலர் உண்மைத் தொண்டர்களாய்க் கழகத்திற்காகப் பாடுபட்டனர். அத்தகையோரில், ஆரம்ப காலத் தொண்டர்களாய் மனதில் பதிவானவர்கள் அறுவர். அவர்கள் பற்றிச் சில சொல்கிறேன்.

கிரிதரன்

முதலாமவன் கிரி என்று எங்களால் அழைக்கப்பட்ட கிரிதரன். இவன் படித்தது யாழ். மத்திய கல்லூரியில். பின்னாளில் எப்படியோ எங்களுக்கு நண்பனானான். எனக்குத் தூரத்து உறவினன். நட்பின் பின்னர்தான் அவ்வுறவு தெரியவந்தது. இளைஞர்களுக்கே உரியதான பலவீனங்கள் நிரம்பியவன். ஆனாலும், தமிழை நன்கு விரும்பினான். புல்லாங்குழல் பழகியிருந்தான். எங்களது ஆரம்பகால முயற்சிகளில், இவன் பங்களிப்பு மறக்க முடியாதது. என்னுடனும் குமாரதாசனுடனும் பலகாலம் உடன் நின்று பணியாற்றியவன்.

போராசிரியர் இராதாகிருஷ்ணனின் வருகையின்போதெல்லாம், உயிர் கொடுத்து உழைத்தான். வசதியில்லாத காலத்தில் இவன்தான், எங்கள் கழகத்தின் முதல் 'போட்டோ கிராபர்'. எங்கள் விழாவிலேதான் அக்கலையை அவன் பழகினான். அதனால் எங்களின் பல விழாப் படங்கள் இல்லாது போயின. எந்த நேரமும் சிரித்துப் பழகுபவன். இன்று அமெரிக்காவில் விரிவுரையாளனாய் இருக்கிறான். இன்றும் அதே உரிமையும் நட்பும் தொடர்கின்றன. கழக முயற்சிகளில் இவனது பங்களிப்பு இன்று பெரும்பாலும் இல்லை எனலாம்.

ரி.எஸ்.சிவகுமாரன்

அடுத்தவன் நாயன்மார்கட்டு சிவகுமாரன். உணர்ச்சிகளின் மொத்த வடிவம். இந்துக் கல்லூரியில் எங்களோடு படித்தவன். எல்லா முயற்சிகளிலும் எங்களோடு உடன் நின்றவன். ஊர் இளைஞர்களுக்கு இவன் ஒரு முன்னோடி. இவன் என்மேல் வைத்திருந்த அன்பும் மதிப்பும் கண்டு, அவ்வூர் இளைனஞர்களும் என் மேல் மதிப்புக் கொண்டனர். அவர்களில் பலர் பின்னாளில் போராளிகளாய் மாறினர். என்னோடு தொடர்புகொண்ட அவனது நண்பர்களில், இருவர் முக்கியமானவர்கள். ஒருவன் மனோகர், மற்றவன் சற்குணநாதன். எங்கள் ஆரம்பகால விழாக்களில், சிவகுமாரன் கவியரங்கங்களில் பாடினான். நாயன்மார்கட்டில் இருந்த அவனது வீடு, எங்கள் சந்திப்புக் களமாய் இருந்தது. படிக்கும்போதே "ரியூட்டரி' நடத்தி வந்தான். பின்னர் சில காலத்திலேயே வெளிநாடு சென்றான். ஒருமுறை வெளிநாட்டிலிருந்து வந்திருந்த போது, என் குருநாதர் போராசிரியர் இராதாகிருஷ்ணனின் அஞ்சலிக் கூட்டத்தில், இவன் பேசிய பேச்சும், அழுத அழுகையும் அனைவரையும் அதிர வைத்தன. அவன் பற்றிப் பின்னர் எழுதியிருக்கிறேன். சிவகுமார் இன்று இலண்டனில் வாழ்கிறான். கழக முயற்சிகளில் இப்போது இவனுக்கு அதிக ஈடுபாடு இல்லை.

வசந்தன் - மகாராஜா - விஷ்ணுதாசன்

இம் மூவரும் கழகத்தைவிட என்னை நேசித்தவர்கள். இன்று வரை உறவாய்ப் பழகுபவர்கள். என்மேல் கொண்ட அன்பால் கழக முயற்சிகளிலும் ஓரளவு ஈடுபட்டவர்கள். வசந்தன், மகாராஜா இருவரும் என்னோடு, இந்திய விழாக்களிலும் கலந்து கொண்டனர். வசந்தன் மகிழ்ச்சியான ஒரு மனிதன். எதிர்பார்ப்புகளைக் குறைத்து, வாழ்க்கையை நிறைவாக்கிக் கொள்பவன். நான் முன்னே சொன்ன இரசாயன ஆசிரியை கமலாசினியின் வகுப்பில், ஒருமுறை எங்களுக்குப் பரீட்சை நடந்தது. அப்பரீட்சையில் மற்றவர்களைப் பார்த்தெழுதி, வசந்தன் என்னைவிட அதிக புள்ளி வாங்கினான். கமலாசினியிடம் நல்ல பெயர் வாங்க, இவனை இரகசியமாய்க் காட்டிக் கொடுத்தேன். அதையறிந்து, என்மேல் சிறிதும் பகை கொள்ளாமல், நேராக என்னிடம்வந்து, "இப்படிஏன்செய்தாய்?" என்று கேட்டான். கூசிப்போனேன்.

அன்றிலிருந்து எங்கள் நட்பு மேலும் இறுகிற்று. இவனது தந்தை, தாய், தமையன்மார், சித்தி அனைவரும் என்னை உறவாய் நேசிப்பவர்கள். வசந்தன் இன்று யாழ்ப் பாணத்தில் வாழ்கிறான். மகாராஜா ஒரு விதத்தில் என் உறவினன். என்மேல் நிரம்பப் பிரியம் கொண்டவன். கொஞ்சம் கஞ்சன். ஆனாலும், வரையறுத்து செய்ய வேண்டிய கடமைகளை, எல்லோருக்கும் சரிவரச் செய்வான். கழகத்திற்காக இவனிடம் சண்டை பிடித்துப் பணம் பறிப்பேன். சுரக்கமாட்டான்; கறப்பேன். ஆனாலும், கழகத்தில் அதிக அக்கறை கொண்டிருப்பான். விழாக்களை விரும்பி இரசிப்பான். இன்று லண்டனில் வசிக்கிறான். விஷ்ணுதாசனும்இவ்விருவரைப்போலவேகழகத்தோடு இணைந்திருந்தவன். எங்கள்மேல் உறவாய் அன்பு செலுத்துபவன். இவன் குடும்பமும் எங்கள்மேல் அன்பு செய்த குடும்பமே. நட்பு நெருக்கத்தால் கழகத்திற்குச் சில துணைகள் செய்தான். ஆரம்பகால உறுப்பினர்களில் இன்று இவன் ஒருவனே, கொழும்பில் எம்மோடு தொடர்பில் இருக்கிறான். கழக முயற்சிகளில் இம்மூவரதும் பங்களிப்புக் குறைவுதான். ஆனாலும், அன்று தொட்டு இன்று வரை, எனதும் கழகத்தினதும் வளர்ச்சி கண்டு ஆனந்திப்பவர்கள் இவர்கள்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

நிலைமாறும் உலகில் புலம்பெயர் தமிழர்கள் - பாகம்: 2

★ லோகன் பரமசாமி (லண்டன்)

ஒற்றுமையற்ற தமிழினம்; புலம்பெயர் நாடுகளின் கருத்தாதரவு திரட்டும் முயற்சிகள் வீணடிப்பு!

சிறிலங்காவின் பொறுப்புக்கூறல் பொறிமுறையையும், அரசமைப்பு மாற்றத்தையும் ஊக்கப்படுத்தும் சில மேலைத்தேய இராஜ தந்திரிகள், அரச உதவியுடன் மக்கள் பரம்பல் சமநிலையை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன்மூலம் சிங்கள மயமாக்கல் நிறைவேறுவதையிட்டோ அல்லது தமிழர் தாயக கோட்பாடு வலுவிழந்து போவதையிட்டோ அவர்கள் கவலை கொள்பவர்களாகத் தெரியவில்லை.

பெரும்பான்மைவாத ஜனநாயக அரசியலை அவர்கள் ஆதரிப்பதற்கான காரணம், சிங்கள பெரும்பான்மை இனத்தின் மத்தியில் மேலைத்தேய சக்திகளாக தம்மை காட்டிகொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி போன்ற கட்சிகள், சிறிலங்காவில் அரசியல் மாற்றத்தை உருவாக்கவல்ல சக்திகள் தாமே என்று மேலைத்தேய இராஜதந்திரிகளை நம்ப வைத்துள்ளமையே ஆகும்.

அத்துடன், தமிழ் மிதவாத கட்சித் தலைவர்களை வீரியம் குறைந்த நிலையில் வைத்திருக்கின்றமைக்கு ஜனநாயகத்திற்கு இடையூறு செய்பவர்களாக காரணம் காட்டி மேலைத்தேய, இந்திய தலையீடுகளை பயன்படுத்துகின்றனர். இது சிங்கள தலைவர்களது பெரும் பான்மைவாத ஜனநாயகத்தின் சிறப்பம்சமாகும்.

தமிழ்த் தலைவர்கள் கையேந்தி நிற்கும் நிலை

பெரும்பான்மை வாக்குப்பலத்தால் சிறிலங்காவில் மேலைத்தேய கொள்கை சார்பு அரசியல் நடத்த முடியும் என்பதை, உள்நாட்டு அரசியல் பொறிமுறைக்குள் தமிழர்களது முக்கியத்துவத்தின் தேவையை தாழ்த்தி மதிப்பிடவைப்பதன் மூலம், இலங்கைத்தீவில் தமிழ் மிதவாத கட்சித்தலைவர்களை கொழும்பை நோக்கி கையேந்தி நிற்கும் கையாலாகாத நிலையை சிங்களம் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

கடந்த தேர்தல்களில் தமிழர்களது வாக்கு மிதவாத தமிழ்த் தலைவர்களது செயற்றிறனற்ற நிலையால் பெரும் பான்மை அரசியலுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக இருந்தது. இது தமிழர்களது பலம் மேலைநாட்டு இராஜதந்திர நகர்வுகளுக்கு முற்றுமுழுதான தேவை யற்ற நிலையை வெளிக்காட்டி இருந்தது.

சிறிலங்காவில் மேலைத்தேய சார்பாக இருக்கக்கூடிய ஆளும்தரப்பினர் சீனாசார்பாகவோ அல்லது மேலைத்தேய விதிகளுக்கு அப்பால் சிந்திக்க முற்படும் போது மட்டும் தமிழர் மீது நடத்தப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறல் எனும் தந்திரத்தை ஒரு காரமூட்டும் அல்லது சிறிலங்கா ஆட்சியாளரை மிரட்டும் உபகரணமாக மேலைத்தேயம் வைத்துக் கொண்டிருக்கிறது.

இதனால், மேலைதேயம் விரும்பாத வகையில் தமிழர்கள் அதீத தேசிய வாதத்துடன் செயற்படும் போது தமிழர்களையே கடிந்து கொள்ளும் போக்கை கடைப்பிடிக்கின்றது. International Crisis Group 2010 ஆம் ஆண்டு சிறிலங்காவின் அதீத இன்அழிப்பு முடிந்து ஒரு வருடத்திற்குள்ளேயே புலம்பெயர் தமிழர்கள் தொடர்ச்சியாக சுதந்திர வேட்கை கொண்டு போராடுவதும் விடுதலையை நோக்கி குரல் எழுப்புவதுவும் உள்நாட்டுத் தமிழர்களிடம் இருந்து புலம்பெயர் தமிழர்கள் இடைவெளியை உருவாக்கிக் கொள்கின்றனர் என தமிழ் மக்கள் மீது அழுத்தம் பிரயோகித்திருந்தது.

இங்கே ஈழத்தமிழ் மக்களின் பலம் ஓங்குவது மேலைத்தேய நலன்களுக்கு அப்பால் சிறிலங்கா அரசியலில் தளம்பல் நிலையை ஏற்படுத்தும் என்பது பார்வையாக உள்ளது. இதில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு குறித்தும் நகர்வுகள் குறித்தும் பார்ப்பது உலகத்தில் தமிழ்மக்களது செயற்பாடுகளை நீர்த்துப்போகச் செய்வதில் எவ்வாறு பல்வேறு சக்திகளும் செயற்படுகின்றன என்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இனப்படுகொலை என்பதை நிரூபிக்க பெரு முயற்சி

2009 ஆம் ஆண்டிலிருந்து புலம் பெயர் தமிழ் அமைப்புகள் பல உதய மாகின. சிறிலங்காவில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதை நிரூபிப்பதில் உலகநாடுகள் மத்தியில் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பெரும் முயற்சிகள் செய்து வருகின்றன. இருந்த போதும் கூட, அமைப்புகள் மத்தியில் திடமான கொள்கை இணக்கப்பாடு ஏற்படாமை பெரியதொரு குறையாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு புலம்பெயர் அரசியல் செயற்பாட்டு அமைப்புகளும் தம்மை நிறுவும் செயற்பாட்டில் பெருமுயற்சிகள் செய்து கொண்டன. அரசியல் மூலோபாயங்களை தமக்கென தனித்துவமான முறையில் வகுத்துக் கொண்டன. புலம்பெயர் தமிழ் மக்களிடையே தமக்குச் சட்ட அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு செயற்பட்டன.

இதற்கான போட்டியில் சில அமைப்புகள் தமது போட்டி அமைப்புகளை தேசியவாத வீரியம் அற்றவையாக குறை கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டன. அல்லது தாமே தமிழ் மக்களின் பிரதி நிதிகள் என்று கூறுவதில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களையும், அரசபிரதிநிதிகளையும் குழப்பத்திற்குள் உள்ளாக்கி விட்டன. ஒரு தாய் நிறுவனமோ அல்லது ஏற்பாட்டாளர் நிறுவனமோ இல்லாத நிலை இதில் பெரும் வலுவற்ற, ஒழுங்கற்ற செயற்பாடுகளுக்குள் தள்ளிவிட்டது.

ஆனால், இவை விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தின் முடிவுகளுக்குப்பின், 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆயுதப்போராட்டம் குறித்த செயற்பாடுகளில் அனைத்து புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் மிகக் குறைந்த நம்பிக்கையை பிரதிபலித்ததை மேற்கத்தேய ஆய்வாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் மிக கவனமாக சீர்தூக்கிப் பார்த்துள்ளனர் என்பது கவனத்திற்கு உரியது.

இப்படியும் குழப்பம்

அமைப்புகள் மத்தியில் தமிழ் மக்களது அபிலாசைகள் குறித்த நியாயமும் விடுதலைப்புலிகளின் ஆகக்குறைந்த பேச்சுவார்த்தை பொருளான தாயக கோட்பாட்டிலிருந்து விலகாது இருப்பது தனித்துவமானது. ஆனால் தனி நாட்டை கோரிக்கையாக கொண்டு கருத்தாதரவு தேடி செயற்பட்டவர்களுக்கும், கூட்டாட்சி இருந்தாலே போதும் என்ற கருத்தாதரவு தேடி செயற்பட்டவர்களுக்கும் இடையில், சர்வதேச நிறுவனங்களும், இராஜதந்திரிகளும் குழப்பமடைந்து போயுள்ளனர் என லாம்.

அதேபோல இது ஓர் இனப் படுகொலை என்ற வாதம் கொண்டவர்களுக்கும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றச்செயல் என்ற வாதம் கொண்டவர்களுக்கும் இடையில் சர்வதேச நிறுவனங்களும் இராஜ தந்திரிகளும் குழப்பப்பட்டு விட்டனர். இதனால் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமே தலைகுனிவுக்கு உள்ளாகும் நிலையில் உள்ளது.

தொடர்பாடலில் சர்வதேசம் பல்வேறு இலகுவான- எந்தவித கட்டுப்பணமும் அற்ற வசதிகளை கொண்டிருக்கும் இக்காலத்தில், சிறிய நிறுவனங்கள் தமக்குள்ளே ஒருமித்த கொள்கை உடன்பாடு அற்று இருக்கின்றமை அவர்கள் மத்தியில் குழப்பநிலை இருப்பதையே காட்டி நிற்கிறது என்பது மேலைத்தேய ஆய்வாளர் ஒருவரது பார்வையாக உள்ளது.

சிறு நிறுவனங்களின் கைகளிலே சிக்கி திடமான கொள்கை இல்லாத வர்களை நாம் ஒற்றுமைப்படுத்தி சிறிலங்கா அரசின் கீழ் வாழ கற்றுக்கொள்ள வைக்கவேண்டும் என்று மேலைத்தேய இராஜ தந்திரிகள் கூறுவதற்கு இந்த உடன்பாடு அற்ற நிலையே காரணமாக இருக்கிறது.

ஒற்றுமையற்ற தமிழினம்

ஆக, உலகத்தில் தமிழ் மக்களது அபிலாஷைகளுக்காக புலம்பெயர் நாடுகளில் கருத்தாதரவு திரட்டுவதில் நீர்த்துப் போகக்கூடிய வகையில் செயற்படும் முதலாவது எதிர்சக்தி என்பது ஒற்றுமையற்ற தமிழினமே ஆகும்.

புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகள் சின்னஞ் சிறிய தீவான சிறிலங்கா அரசின் இராஜதந்திர பலத்தை விட அதிகம் பலம் வாய்ந்தது எனக் காட்டப்படுகிறது. சர்வதேச அளவில் சிறிலங்கா சிறிய அரசாக உள்ளது. புலம்பெயர் கருத்தாதரவு வலை அமைப்புகளின் செல்வாக்கு சர்வதேச தொடர்பு சாதனங்களின் மத்தியிலும் கல்வியாளர்கள் மத்தியிலும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மத்தியிலும் அதீத செல்வாக்கு கொண்டதாகக் காட்டப்படுகிறது.

சர்வதேச சமுகத்தை தமது பக்கம் திருப்புவதற்கு, ஓர் அனுதாப மனச் சூழலை ஏற்படுத்துவதுடன் ஒரு சிறிய அரசை பிரிவினைவாதிகள் கூறுபோடப் பார்க்கின்றனர் என்ற விவாதமே போதுமானதாகும். ஏனெனில் உலகில் எந்த தேசிய அரசும் பிரிவினையை ஆதரிப்பனவாக இல்லை.

புலம்பெயர் தமிழ் மக்கள் சிறிலங்காவில் தயாரிக்கப்பட்ட பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என்ற பிரசாரம் குறித்தும் ஐரோப்பிய கூட்டமைப்பால் நிறுத்தப்பட்டு வைத்திருந்த GSP வரிச்சலுகை புலம்பெயர் தமிழ்ச்சமுதாயத்தின் போராட்டங்களின் காரணமாகவே உருவானது என்பதுவும் அனுதாப மனநிலையை உருவாக்கக் கூடிய விவாதங்களாக சர்வதேச சமூகத்தின் முன் வைக்கப்படுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

புலம்பெயர் அமைப்புக்கள், தமிழ்த் தலைவர்கள் மத்தியில்

கருத்து, செயலில் ஒற்றுமை ஏற்பட்டால் மட்டுமே ஈழத் தமிழருக்கு விடிவு!

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல மில்லியன் டொலர் வியாபார இழப்பு மட்டுமல்லாது பல ஆயிரக் கணக்கான, குறிப்பாக பெண் தொழிலாளர்கள் ஆடை உற்பத்தி துறையில் வேலை இழந்து போயினர் என புலம் பெயர் தமிழ் மக்கள் மீதே பழியைப் போட்டு இனஅழிப்பு, குற்றச்சாட்டையே புரட்டிப்போடும் அனுதாப அலைகள் உருவாக்கப்பட்டன.

அதேவேளை, அரசியல் தீர்வு குறித்து சர்வதேச இராஜதந்திரிகள் பேசும் போது புலம்பெயர் தமிழ்ச் சமுதாயம் பெரிய அளவில் தாக்கம் விளைவிக்கும் ஒருதனி அரசியல் செயல்வடிவம் அல்ல என்றும் வலியுறுத்தி பெரும்பாலான புலம்பெயர் சமுதாயம் மிதவாத போக்கைக் கொண்டவர்கள் என்று மீண்டும் புரட்டிப்போட்டு விவாதிக்கும் தந்திரம் பயிற்றப்பட்டு பேணப்படுகிறது.

புலிகளைச் சாட்டி தடைத் தந்திரம்

விடுதலைப்புலிகள் இல்லாத காலத்திலும் புலிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்ற அறிக்கைகளை வெளியிடுவதில் சிறிலங்கா அரச அதிகாரிகள் தவறுவதில்லை. இந்திய செய்தி நிறுவனம் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பேட்டிகண்ட போது, சோமாலிய கடற்கொள்ளையர்கள் இன்னமும் செயலாற்றும் வல்லமை யுடன் இருக்கிறார்கள். ஆகவே, விடுதலைப்புலிகளும் இருக்கிறார்கள் என வரட்டு காரணம் தெரிவித்திருந்தார்.

இந்தஅறிக்கைகள்மூலம்விடுதலைப் புலிகள் சர்வதேச அளவில் தடை செய்யப்பட்டநிலையை வைத்திருப்பதுடன் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் சட்டஅங்கீகாரம்பெறமுடியாதநிலையை ஏற்படுத்துவது, தமிழ் மக்களும் எந்த அமைப்புகளும் இணைந்து செயலாற்ற முடியாத நிலையை வைத்திருப்பது என்பன முக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

அத்துடன், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது சர்வதேச இராஜ தந்திரிகள்மத்தியில் ஒரு மனப்படத்தை உருவாக்குவதில் பெரும் கவனமாக கொண்டது. புலம்பெயர்தமிழ் அமைப்புகளின் உள்ளக முரண்பாடுகளை பகிரங்கப்படுத்துல், அவற்றின் ஜனநாயக கலாசாரம் ஆகியவற்றை கேள்விக்கிடமானதாக ஆக்கி மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் எப்பொழுதும் சந்தேகக் கருத்துகளை உருவாக்குவது சிறிலங்கா அரச சார்பு தனிமங்களின் முக்கிய செயற்பாடாகப் பார்க்கப்படுகிறது.

ஆக, புலம்பெயர் தமிழ் மக்களது செயற்பாடுகளை நீர்த்துப்போக செய்வதில் இரண்டாவதாக சிறிலங்கா அரசும் அதன் திட்டமிட்ட செயற்பாடுகளும் அடுத்த முக்கிய காரணிகளாகக் குறிப்பிடலாம்.

புலம்பெயர் சமுதாயங்களின் செயற்பாட்டில் தலையீடு

மேலும் சர்வதேச நாடுகளுக்கு இடையிலான அரசியல் பாரம்பரியம் எவ்வாறு புலம்பெயர் சமுதாயங்களின் செயற்பாட்டில் தலையிடுகிறது என்பது அடுத்த முக்கியமான விடயமாகும். இந்த உலகில் சிறிய அரசுகளும், பெரிய அரசுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று வாழ்கின்றமையே ஒரு சமூகமாகக் கருதப்படுகிறது.

இந்தச் சமூகத்தின் மத்தியில் யூதர்கள், ஆர்மேனியர்கள், குர்திஸ் இனத்தவர்கள், இந்தியர்கள், சீனர்கள், கியூபர்கள், பாலஸ்தீனியர்கள், அல்பானியர்கள், கொசோவோக்கள் என உலகில் உள்ள ஒவ்வோர் இனத்தவருக்கும் புலம் பெயர்ந்த தொடர்புகளை கொண்டவர் வெளிநாடுகளில் அரச எல்லைகள் கடந்து வாழ்ந்து வருகின்றனர்.

வல்லவனுக்கே வாழ்வுண்டு, என்ற வகையில் பெரிய அரசுகள் தம்மை வல்லரசுகளாகக் கட்டிஅமைத்துக் கொள்வதிலும் வளர்ந்து வரும் அரசுகள் பிராந்திய முன்னிலை அரசுகளாக தம்மை நிர்மாணிப்பதிலும் போட்டிகளில் இருக்கும் இவ்வேளையில், நாடுகள் கடந்த புலம்பெயர் சமுதாயங்கள் புதிய சர்வதேச அரசியல் நீரோட்டத்துடன் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தகுந்த நேரத்தில் தகுந்த இடத்தில்பயன்படுத்தாது போனால் தமது நாட்டுக்கும் தமது இனத்திற்கும் பல்வேறு எதிர்பாராத் பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும் எனும் எண்ணப்பாட்டையே கொண்டுள்ளனர்..

அரசியல் எல்லைகளால் பிரிக்கப்பட்டு வாழ்ந்து வரும் புலம்பெயர் சமுதாயங்கள் தமது தேசியத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளன. அரசுகளின் பிரதிநிதித்துவம் கொண்ட பொது நிறுவனங்களில் உதாரணமாக சர்வதேச மனித உரிமை மையம் போன்ற நிறுவனங்களில் தமது இனத்தின் உரிமைகளையும் இனம் சார்ந்த குற்றச் சாட்டுகளையும் எடுத்து விளக்கும் போது அரசுகள் முன்னுரிமை பெறுகின்றமையும் பரிந்துரைகளுடன் குற்றங்களில் இருந்து விடுபட்டுக் கொள்வதையும் சகித்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

மனித உரிமை விவகாரத்தில் தொடர்ந்து ஏமாற்றம்

புலம்பெயர் சமுதாய அமைப்புகள் மனித உரிமை மீறல் விவகாரங்களிலும் இனஅழிப்பு விவகாரங்களிலும் ஆதாரம்மிக்க குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்ட போதிலும் அரசிற்கு மேலும் கால அவகாசம் வழங்குதல் என்ற முடிவுக்கே இறுதியில் வந்து முடிவது கவனிக்கத் தக்கதாகும். இதனால் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஊக்கம் கெட்டுப் போவதற்குரிய சாத்தியக்கூறுகள் உருவாக்கப்படுகின்றன.

புவிசார் அரசியல் நலன் குறித்து நகர்வுகளை முன்னெடுக்கும் அதிகாரம் மற்றும் பொருளாதார முதலீட்டு சந்தர்ப்பங்களுக்கான உரிமம் ஆகியன அரசுகளின் கைகளிலேயே இருக்கின்றமையால் அரசுமுறை செயற்பாடுகளே சட்ட அங்கீகாரம் பெற்றவையாகப் பார்க்கப்படுகின்றன.

சிறிலங்காவின் தற்போதைய அரசியல் நிலைமையை எடுத்து நோக்குமிடத்து 'ஒருமித்த நாடு' என்றோ அல்லது 'ஒற்றைஆட்சி' என்றோ தீர்மானங்களை தமிழ் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமிடத்து தாராள உரிமைகள் குறித்து பேசுவதானால் நாட்டை விட்டு வெளியேறுவது மட்டும் தான் ஒரே வழியாகும்.

அதேபோல, இதனை அமுல்படுத்தும் அரசின் நோக்கமும் ஆட்சி உரிமை குறித்து சிந்திக்கும் சிறுபான்மையினரை தனது பிராந்திய கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்து வெளியேற்றுவது தான் ஒரே தெரிவாகும்.

இதனால் மேலும் பல்லாயிரக் கணக்கான தமிழர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை மீண்டும் ஏற்படவே வாய்ப்புள்ளது.

பொதுவாக புலம்பெயர் சமுதாயங்களின் மத்தியில் இருக்கக் கூடிய அமைப்புகள் தமக்குள்ளேயே போட்டி மனப்பாங்கு கொண்டன. தமது சமுதாய அடையாளத்தை பேணவேண்டும் என்ற எண்ணப்பாட்டிலும் பார்க்க, தமது சமுதாயத்தில் தாமே முழுப் பிரதிநித்துவத்தையும் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

இந்தநிலையை சாதகமாக கொண்டு சிறிலங்கா அரசு உட்பட சர்வதேச அரசுகள் போட்டி நிலையை பேணுவதன் மூலம் அமைப்புகளை சிதறடித்து விடுகின்றன.

மூன்றாவதாக, அரசு முறை சர்வதேச பண்பாடு ஈழத்தமிழ் சமுதாயத்தின் விடுதலை நோக்கிய செயற்பாடுகளை நீர்துப்போகச் செய்வதில் பங்களிக்கின்றன.

ஒருங்கிணைப்பு இல்லாததால் அபாயகரமான நிலையில்...

புலம்பெயர் அமைப்புகள் தமக்குமத்தியில் ஒருங்கிணைப்பு இல்லாத நிலையும் தாயகத்தில் செயலாற்றக் கூடிய புலம்பெயர் சார் அமைப்புகளுக்கும் அல்லது தேசிய வாத அமைப்புகளுக்கும் இடையில் தொடர்பு இல்லாத நிலையும் மிகவும் அபாயகரமானதாக புலம்பெயர் சமூகங்கள் சார்பாக ஆய்வு செய்யக் கூடியவர்களின் கருத்தாக உள்ளது.

ஆபிரிக்கநாடு ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்டஅனுபவங்களில் இருந்து, புலம்பெயர் சமுதாய அபிலாஷைகளை திசைதிருப்பிவிடுவதற்கும் அதன்மூலம் மிதவாத, சமுதாய எதிர் போக்காளர்கள் அல்லது அரச ஒடுக்குமுறைக்கு உள்ளாகும்இடங்களில்அரசசார்புகுழுக்களுடன் குழப்பமடைந்து போகும்தன்மை அதிகம் உள்ளதாக சந்தர்ப்பங்களை ஆதாரம் காட்டி ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

புலம் பெயர் அமைப்பு ஒன்று தாயகத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை முன்வைத்து கருத்தாதரவு செய்து தாம் புலம்பெயர்ந்து வாழும் நாட்டு அரச பிரதிநிதிகளை உண்மை நிலை அறிந்து வரும் பொருட்டு தாயகத்திற்கு அனுப்பி வைக்குமிடத்து, தாயகத்தில் இருக்கக் கூடிய மிதவாதிகளும் அரச விசுவாசிகளும் அந்த பிரதிநிதிகளை நட்சத்திர விடுதிகளில் இராப்போசன விருந்துகளில் பங்குபற்ற வைத்து, திருப்பி அனுப்பி வைத்தமை அந்த அனுபவமாக அரச பிரதிநிதி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இத்தகைய அனுபவங்கள் போலவே இன்று சிறிலங்காவுக்கு பயணம் செய்யும் ஒவ்வோர் அரச உயர்மட்ட அதிகாரிகளும் கொழும்பையும் யாழ்ப் பாணத்தையும் இருவேறு அதிகா ரங்களாக பார்க்கின்றனர். இத்தகைய நிலை புலம்பெயர் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகளினது செயற்பாட்டின் விளைவாகவேயாகும்.

ஆனால், யாழ்பாணத்திலும் கொழும்பிலும் தமிழ்த் தலைவர்களை வெளிநாட்டு இராஜதந்திரிகள்சந்திக்கும்போது அவர்களது ஒரே கருத்தைப் பிரதிபலிக்கின்றனரா என்பது கேள்விக்குரியதாகும். இங்கே புலம் பெயர் அமைப்புகளுக்கும் கொழும்பை நோக்கி அரசியல் செய்பவர்களுக்கும், கூட்டாட்சி சிந்தனை கொண்ட யாழ்ப்பாணத் தலைவர்களுக்கும் இடையில் கருத்து ஒற்றுமை பேச்சு ஒற்றுமை, செயல்ஒற்றுமை, மிக முக்கியமானவையாகும்.

இந்த ஒற்றுமை மூன்றும் ஒரு நேர் கோட்டில் வரும் போது தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தெளிவு பெறுவார்கள். அத்துடன், சர்வதேச சமுதாயமும் ஒரு முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கும்.

இல்லாது போனால் சிறிலங்கா இங்கே வளர்ச்சி கொண்டுள்ளது அங்கே வளர்ச்சி கண்டுள்ளது என்று தேவையற்ற துறைகளை எல்லாம் உதாரணமாகக் காட்டி, சர்வதேச நிறுவனங்களில் ஒவ்வொரு மீளாய்வு அறிக்கையிலும் சிங்கள பௌத்த மேலாதிக்க ஒற்றையாட்சியைத் தக்க வைத்து கொள்ளவே எத்தனிக்கும். ★

நன்றி: புதினப் பலகை

காலைக்கதிர் Kalaikkathir



கற்பக மூலிகை வில்வம்

தமிழ்ப்பெயர் : வில்வம் ,வில்வை, குசாபி, கூவிளம்
பொதுப்பெயர் : வில்வம்
தாவரவியல் பெயர் : Angle marmelos

இலங்கை, இந்தியா மற்றும் அயன மண்டலத்தைச் சேர்ந்த ஆசிய நாடுகளில் காணப்படும் தாவரம் ஆகும். இமயமலை அடிவாரத்தில் இருந்து தென் இந்தியாவின் கடைக் கோடி வரை வியாபித்து நிற்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணில் இருந்துவரும் அரிய மரங்களில் ஒன்று. சைவ சமயத்தவருடன் மிகவும் தொடர்புடையது. 30 இற்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தல விருட்சமாக அமைந்துள்ளது. இன்ன பிணிக்கு மட்டுமே மருந்தென்று அமையாது எல்லா பிணிகளையும் நீக்கும் தன்மையுடையது.

3 கூட்டிலைகளை மாற்றடுக்கில் கொண்டு உருண்டையான மணம் உள்ள சதைக்கனிகளை பெற்ற முட்கள் உள்ள பெரியமரம். எண் கூட்டிலைகளைக் கொண்டஅரியவகை வில்வம் மகாவில்வம் அல்லது பிரம்மவில்வம் என்று அழைக்கப்படுகிறது. முள்ளற்ற வில்வ வகைகளும் அரிதாகக் காணப்படுகிறது.

விதை மூலம் காற்றுப் பதியம் மூலம் ஒட்டுக்கன்றுகள் மூலம் அவற்றின் இனப்பெருக்கத்தை மேற்கொள்ள முடியும். இந்துக்கள் மரபுவழியில் பசுஞ் சாணம் கலந்த மண்ணினுள் 3 நாள்கள் விதையைவைத்து அமாவாசை தினத்தில் மணலினுள் புதைத்து,45 நாள்களின் பின் கன்றுகளை பெற்றுக் கொள்கின்றனர். இது இலையுதிர் வகையைச் சேர்ந்த மரம் ஆகும்.

பார்ச்சுரூன் ட்ரீ எனப்படும் அதிஷ்ட வில்வமரத்தை பூஜை செய்து வழிபடுவதன் மூலம் கடன் தொல்லைகள் அகன்று செல்வம் பெருகும் என நம்புகின்றனர். வில்வ மரம் எங்கு வளர்க்கப்படுகின்றதோ அங்கு மகாலட்சுமி வசிப்பாள் என்பது நம்பிக்கை. சிவபெருமானின் அம்சமாக விளங்கும் வில்வையின் சிறப்பை சிவராத்திரி காலங்களில் அறிந்து வணங்குதல் வேண்டும்.

சித்த மருத்துவத்தில், பித்தத்தை தணிக்கும் மிகமுக்கியமான மூலிகை ஆகும். பழங்களின் ராஜா என போற்றப்படுகின்றது. இம் மரத்தினது பூ, இலை, பிஞ்சு, பழம், வேர்ப்பட்டை, பிசின் ஆகியவை மருத்துவ பயன் உடையதாகக் காணப்படுகிறது. வில்வமரத்தின் பாகங்கள் இயல்பாகவே பூச்சி கொல்லி ஆற்றலும், பூஞ்சை எதிர்ப்புத் தன்மையும் உடையவை.

இலை: நுரையீரல் தொடர்பான நோய் தீர்க்கும் இயல்பு கொண்டது. நாள்பட்ட



இருமல், சளி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு காலைவேளை உணவுக்கு முன்னர், 7 - 8 வில்வ இலைகளை சாப்பிட்டு வரநோய் குணமடையும். இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்யும். செரிமான கோளாறுகள், வாயுத் தொல்லைகளையும் வில்வ இலை

பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலே ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பது அதி உன்னதமானது

கட்டுப்படுத்தும்.

பழம்: இதில் புரதச்சத்து, தாது உப்புக்கள், மாச்சத்து, சுண்ணாம்பு, இரும்பு மற்றும் கொழுப்புச் சத்துக்கள் காணப்படுகின்றன. வயிற்றுப்போக்கு, சீதபேதி ஆகியவற்றுக்கு சிறந்த மருந்து. பழத்தின் உள்ளே இருக்கும் கூழ் போனற பசையை நல்லெண்ணையில் ஊறவைத்து உடலில் தேய்த்து குளித்துவர சொறி, சிரங்கு, தோல் நோய்கள் கட்டுப்படும். ஜாம், பழச்சாறு, பழக்கூழ், பானங்கள், இனிப்புகள் போன்றன தயாரிக்கப்படுகின்றது.

விதை: இதிலிருந்து வில்வ எண்ணை தயாரிக்கப்படுகிறது. இவ் எண்ணை முடி வளர்ச்சிக்குப் பயன் படுகின்றது.

பட்டை: காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதுடன் நெஞ்சுவலி, மூச்சடைப்பு ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகின்றது.

பழத்தின் தோல்: மேல் தோல் ஓடு போல் காணப்படும். அதை நெருப்பில் காட்டி தலையின் வழுக்கை உடைய இடங்களில் பூசிவர நல்லபலன் கிடைக்கும்.

வில்வ விருட்ச விநாயகர் வழிபாடு
ஓம் ஸ்ரீம் க்ரீம் க்லீம் ஐம் வில் வருபிண்யை சௌபாக்ய லட்சுமியை தனதான்யகர்யை நமோநம!!!!

திருமதி. கி.சுதர்சினி.
விவசாயப் போதனாசிரியர்.
பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்,
வவுனியா.

யாழ். பிரதேச செயலகப் பிரிவின் முதியோர் தின நிகழ்வின்போது நடைபெற்ற போட்டிகளில் சோனக தெரு தெற்கு,(ஜே/86) சிறந்த முதியோர் சங்கமாகத் தெரிவானது. அதற்கான முதற் பரிசை யாழ் பிரதேச செயலர் பொ.தயானந்தா வழங்குகின்றார். (இ-19)

ஹட்டன் சென்ன் தோட்ட குடியிருப்பில் திடீர் தீ விபத்து: 19 பேர் பாதிப்பு!

கொழும்பு, நவ. 17

ஹட்டன் சென்ன் தோட்ட குடியிருப்பில் ஏற்பட்ட திடீர் தீயால் 3 வீடுகள் சேதமாகியுள்ளன அத்துடன் அதில் வாழ்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ன் கே.ஜி குரங்கு மலை பிரிவில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றது.

பொது மக்கள், ஹட்டன் டிக்கோய நகர சபையின் தீயணைக்கும் பிரிவு ஆகியன இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீவிபத்தில் எவ்வித உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற்படாத போதிலும் உடைமைகளுக்கு தேதம் ஏற்பட்டுள்ளன.

இந்தத் தீ விபத்து காரணமாக பலரது அத்தியாவசிய ஆவணங்கள் உடுதுனிகள், தளபாடங்கள் போன்றன சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இந்தத் தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றமையுடன் இது தொடர்பான விசாரணைகளையும் சேதவிவரங்கள் தொடர்பாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (க)

கஞ்சா, போதை மாத்திரைகள் தலை மன்னாரில் மீட்பு!

மன்னார், நவ. 17

தலைமன்னாரில் சுமார் 21 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் மற்றும் போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என பேசாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9.15 மணிக்கு கொழும்பு நோக்கி பயணிக்கும் தனியார் பஸ் ஒன்றில் கஞ்சாப் பொதிகள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என மன்னார் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இந்த நிலையில், மன்னார் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக பேசாலை பொலிஸ் நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.டி. எம். சிறில் தலைமையில் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜி.ஜி.பிரியந்த மற்றும் பொலிஸ் சார்ஜன், பொலிஸ் கொன்ஸ்டபிள் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸை வங்காலை பாடு சந்தியில் இடைமறித்து சோதனையிட்டனர்.

இதன் போது இந்த பஸ்ஸில் இருந்து சுமார் 21 லட்சம் ரூபா பெறுமதியான 21 கிலோ 451 கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சாப் பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளதோடு பஸ்ஸில் இருந்த நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் தலைமன்னாரில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று பேசாலை பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர்.

அதன்போது, இந்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 3 ஆயிரத்து 440 போதை மாத்திரைகளையும் மீட்டுள்ளனர்.

தற்போது இந்த சந்தேகநபர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

விசாரணைகளின் பின் குறித்த நபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் மற்றும் போதை மாத்திரைகள் என்பன மன்றில் ஒப்படைக்கப்படவுள்ளன எனப் பேசாலை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-112)

வெலிசறை கடற்படை மருத்துவமனையில் சுகபோகம்: தசநாயக்கவை வெலிக்கடைக்கு மாற்ற உத்தரவு!

கொழும்பு, நவ. 17

இலங்கைக் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்கவை, கடற்படை மருத்துவமனையில் இருந்து, வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றுமாறு கொழும்பு கோட்டே, நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்பு டையவர் என்ற குற்றச்சாட்டில், கைது செய்யப் பட்ட கொமடோர் டி.கே.பி. தசநாயக்க விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், அவர் வெலிசறை கடற்படை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், ஒரு விளக்கமறியல் கைதிக்குரிய வழக்கமான நடைமுறைகளுக்கு மாறாக, கடற்படை மருத்துவமனையில் சிறப்பு வசதிகளுடன் அவர் தங்கியிருக்கின்றார் எனச் செய்யப்பட்ட முறைப்பாடு களை நீதிமன்றம் கவனத்தில் கொண்டிருந்தது.

கொமடோர் டி.கே.பி. தசநாயக்கவுக்கு, கடற்படை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படும் அளவுக்கு தீவிரமான உடல்நலப் பிரச்சினை இல்லை என்று மருத்துவ அதிகாரி சான்றளித்துள்ளார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் கோட்டே நீதி

வான் லங்கா ஜெயரத்ன, கொமடோர் டி.கே.பி.தச நாயக்கவை கடற்படை மருத்துவமனையில் இருந்து, வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நாளில் இருந்து அவர், தொடர்ச்சியாக சிறைச்சாலை மருத்துவமனை மற்றும் கடற்படை மருத்துவமனை யிலேயே இருந்து வந்துள்ளார்.

கொமடோர் டி.கே.பி. தசநாயக்கவை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தோனேஷிய தூதுவரைச் சந்தித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, நவ. 17

இலங்கைக்கான் இந்தோனேஷியதூதுவர்குஷ்தி குரா அர்தியச பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன்விஜேவர்தனவை சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் இந்

தோனேஷியதூதுவர் அர் தியச மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விஜேவர்தன ஆகியோ ருக்கிடையில் சிநேக

பூர்வ கலந்துரையாடல் கள் நடைபெற்றன.

மேலும், இந்தநிகழ்வை நினைவுகூரும் வகை யில் நினைவுச் சின்னங் களும் பரிமாரிக் கொள் ளப்பட்டன.

இந்த நிகழ்வில் இந் தோனேஷியாபல்கலைக் கழகப் பேராசிரியரும் துணை வேந்தருமான கலாநிதி தாடங் குண வன் மற்றும் பல்கலைக் கழகத் துறைசார் தலை வர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய இறைவரி சட்டத்தின் கீழ் நிவாரணங்கள்!

பிரதமர் ரணில் அறிவிப்பு

இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டத்தில் முதலீட் டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய இறை வரிச் சட்டத்தின் கீழ் நிவாரணங்கள் பெற்றுக் கொடுக் கப்பட்டுள்ளன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'இன்டெக்ஸ் ஏசியா 2017' என்ற தெற்காசியாவின் ஆடை உற்பத்திக் கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத் தில் ஆரம்பமானது.

கண்காட்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் திட்டங்களுக்காக அரசு 500 கோடி ரூபாவை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளது. இதன் கீழ் புதிதாக வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்கும் முதலீட்டாளர் களுக்கு 100இற்கு 200 வீதம் மூலதனக் கொடுப்பனவு இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும்.



போட்டித் தன்மை அடிப்படையில் முதலீட்டாளர் களை ஊக்குவிப்பதுடன் தனியாக அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டு அதன் மூலம் நிதி பெற்றுக் கொடுக்கப்படும்.

முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் சர்வதேச ஏற்று மதி கைத்தொழில் மற்றும் தேவைகள் எமது நாட் டிற்கு பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள் ளது என்றும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கு ஜனாதிபதி தலைமையில் புலமைப்பரிசில்!

கொழும்பு, நவ. 17

மீத்தொட்டமுல்லை குப்பைமேடு சரிந்ததில் அனர்த்தத்திற்குள்ளான பாடசாலைப் பிள்ளைகளுக் குப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

'மெத்சரண' புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் நேற்று முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

'பிள்ளைகளைப் பாதுகாப்போம்' தேசிய நிகழ்ச் சித் திட்டத்திற்கு உதவியாக நகர, திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சு, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் AIA லங்கா காப்புறுதி நிறுவனத்தின் அனுச ரணையில் இந்தப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் 107 புலமைப்பரிசில்கள் இதன் போது வழங்கப்பட்டன. 10 பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்கிய ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

கேசர சமிந்து ஹேவாசிங்க என்ற மாணவனால் எழுதப்பட்ட 'சத்சரகேத் தம்சரகேத் அலுத் அவுருது கமன' என்ற நூல் அந்த மாணவனால் ஜனாதிபதியி டம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நகர, திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் சுதர் ஷனி பெர்ணாந்துப்புள்ளே, அமைச்சின் செயலாளர் சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

ஊழலை அறிமுகப்படுத்தியதே கருணாநிதிதான் - சுப்ரமணியன் சுவாமி

தமிழகத்தில் ஊழலை அறிமுகப்படுத்தியது தி.மு.க. தலைவர் கருணாநிதிதான் என்று பா.ஜ.க. எம்.பி. சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் டில்லியில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்,

சசிகலா ஆதரவாளர்கள் வீடுகளில் நடத்தப்பட்ட வருமான வரிச் சோதனைக்கு அரசியல் காரணம் இல்லை. தமிழகத்தில் ஊழலை அறிமுகப்படுத்தியதேதி.மு.க. தலைவர்கருணாநிதிதான். கருணாநிதி, ஸ்டாலின் வீடுகளில் ஏன் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தவில்லை?.

கருணாநிதி வீட்டில் நடத்தாமல் சசிகலா வீட்டில் சோதனை நடத்தினால் சந்தேகம் வருவது இயல்பு. தமிழக ஆளுநர் பன்வாரிலால் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தியதில் எந்தத் தவறும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

வருமான வரிச் சோதனையை அடுத்து

ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் தினகரன் திடீர் ஆலோசனை

அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொதுச்செயலாளரான டி.டி.வி.தினகரன் அடையாறில் உள்ள தனது இல்லத்தில் நேற்று தனது ஆதரவாளர்களுடன் திடீர் ஆலோசனையில் ஈடுபட்டார்.

எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக ஆளுநரைச் சந்தித்துத் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மனு அளித்தனர். இதனைத் தொடர்ந்து ஆதரவு எம்.எல்.ஏக்களான வெற்றிவேல், தங்கதமிழ் செல்வன், பார்த்திபன் உள்ளிட்ட 18 பேர் தகுதி நீக்கம் செய்யபட்டனர். இதை எதிர்த்து அனைவரும் வழக்கு தொடர்ந்தனர். அது நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் டி.டி.வி. தினகரன் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏக்களையும் சென்னைக்கு வரவழைத்து திடீர் ஆலோசனை நடத்தியுள்ளார். இந்

தக் கூட்டத்தில் தகுதி நீக்கம் செய்யப் படாத மேலும் 3 ஆதரவு எம்.எல்.ஏக்களும் கலந்துகொண்டனர்.

கூட்டணிக் கட்சி எம்.எல்.ஏ.க்களான தனியரசு, கருணாஸ், தமிமுன்அன்சாரிஉள்ளிட்டோரும் தினகரன் வீட்டில் நடைபெற்ற ஆலோசனையில் கலந்து கொண்டனர்.

சசிகலா குடும்பத்தினர் வீடுகளில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தி முடித்துள்ள நிலையில் தினகரன் திடீரென ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சசி குடும்பத்தினரிடம் நடத்திய சோதனை வெற்றி பெறவில்லை

வருமான வரித்துறையினர் தெரிவிப்பு

சசிகலாவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்குச் சொந்தமான இடங்களில் கடந்த ஐந்து நாள்களாக நடைபெற்ற சோதனை தோல்வியில் முடிந்துள்ளது என வருமான வரித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி, சசிகலாவிற்கு சொந்தமான 200 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். அதில், 7 கோடிரூபா, 5 லட்சம் மதிப்பிலான நகைகள் மற்றும் ஏராளமான அசையாச் சொத்துக்களின் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன எனத் தகவல்கள் வெளியாகின.

மேலும், சசிகலாவின் குடும்பத்தினரிடம் நடத்தப்பட்ட சோதனையில், ஆயிரத்து 430 கோடி வருமானத்துக்கு வரி செலுத்தாமல் மோசடி செய்தனர் எனவும் தகவல்கள் வெளியாகின.இந்த நிலையில், சசிகலாவின் குடும்பத்தினரிடம் நடத்தப்பட்ட சோதனைகள் வெற்றி பெறவில்லை எனவும், ஜெயா ரி.வி,விவேக் வீட்டில் நூற்றுக்கணக்கானகாலியானபைகள்மட்டுமேசிக்கின எனவும் வருமான வரித்துறையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோச்சடையான் காலத்து கல்வெட்டு கண்டுபிடிப்பு

பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் பாண்டிய மன்னன் கோச்சடையான் கால கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலின் உப்கோவிலான பெரியநாயகி அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற இருக்கிறது. இதற்காக புனரமைப்பு பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. அம்மன் கருவறை, வெளிப்புறச் சுவர்கள் சுத்தப்படுத்தப்பட்டு, வர்ணம்பூசும்பணியில்ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பாண்டியர் காலக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனை தொல்லியல் ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

பெரியநாயகி அம்மன் கோவிலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் 12ஆம் நூற்றாண்டின் எழுத்து வடிவிலும், மற்றொன்று 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்து வடிவமாகவும் உள்ளது. கல்வெட்டில் 12ஆம் நூற்றாண்டு எழுத்து பாண்டிய மன்னன் கோச்சடையான் இந்த கோவிலுக்கு அளித்த நிலதானம் பற்றி குறிப்பிட்டுள்ளது.

மற்றொன்றில் கோவிலுக்குப் பாண்டிய மன்னர்கள்நிலம்அளித்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளது. கல்வெட்டுகள் தொடர்ச்சியாக இல்லாமல் மேலும் கீழுமாக, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ளன. இதேபோல் யாகசாலை மேற்கு பகுதியில் உள்ள நாயக்கர் கால கல்வெட்டும் தொடர்ச்சியாக இல்லாமல் உள்ளது.

எனவே,திருப்பணிகள்நடைபெற்ற போது கல்வெட்டுகள்இடம் மாறி இருக்கலாம். கருவறையில் மறைக்கப்பட்ட கல்வெட்டுகள்ஆயிரம்ஆண்டுகளுக்கு முன்னதாக இருக்க வாய்ப்புள்ளது. இது தொடர்பாக மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -10, சந்தனமாதா கோவில் ஒழுங்கை 2ஆம் ஒழுங்கை, ஆதன இல 20/15 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அப்புத்துரை பெண் நாகரட்ணம் என்னும் பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

சிவியாதெரு, சின்னத்தம்பி சின்னையாவும் பெண் தங்கமுத்துவும் பிரசித்த நொத்தாரிசு சு.இரட்ணசிங்கம் முகதாவில் நிறைவேறிய 1819/1950.01.09 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் சுண்டிக்குளி கந்தையா அப்பாத்துரை பெண் நாகரத்தினத்திற்கு நில.பர 7 குளி 59/32 அறுதியாக வழங்கியுள்ளனர்.பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 6345/2011.06.04 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், யாழ்ப்பாணம், இணுவில் கே.கே.எஸ் றோட், முருகோதயம் இராஜரட்ணம் நீலகண்டன் என்பவர் தான் குறிப்பிட்ட ஆதனத்தை சட்டத்தரணி செல்வி.பொன்னையா முகதாவில் 1983 ஆம் ஆண்டு ஆதனத்தை விற்றவரான நாகரட்ணம் அப்பாத்துரையிடமிருந்து கொள்வனவு செய்து அறுதி உறுதி தன்பேரில் எழுதுவிக்க ஆவண செய்ததென்றும், தான் இந்தியா சென்று தற்போது யாழ்ப்பாணம் வந்து அறுதி உறுதியை தேடிய போது காணிப் பதிவகத்தில் உறுதி பதியப்படவில்லை என்றும் தான் வாங்கிய ஆதனத்தின் தெற்கெல்லை ஆதனத்தை தனது சகோதரன் காலஞ்சென்ற இராஜரட்ணம் ஹரிகரன் பிரசித்த நொத்தாரிசு தி.சண்முகராஜா முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1262/1976.02.02 ஆம் இலக்க நன்கொடை உறுதியில் சொந்தக்காரன் என்றபடியால் அதன் வடக்கெல்லை ஆதனத்தை தான் கொள்வனவு செய்ததாகவும் இற்றைவரை இரண்டு ஆதனங்களையும் தனது சகோதரனின் மனைவியே பார்த்து ஆட்சிசெய்து வந்துள்ளாரென்றும் வெளிப்படுத்தியுள்ளார்.பிரசித்த நொத்தாரிசு திருமதி. ச. இளங்கோவன் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 10259/2014.07.17ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதே முகவரியைச் சேர்ந்த இராஜரட்ணம் நீலகண்டனும் பெண் சுபித்ராவும் குறித்த ஆதனத்தை தங்கள் புத்திரன் இராஜரட்ணம் நீலகண்டன் அபிலாஷிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ஆதன விவரம்: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை 'நறுவிலியடி' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.S.சுப்பிரமணியம். அவர்களின் வரைபட இலக்கம் 1974/02/18இல் துண்டு - 1 எனக்காட்டப்பட்ட நில.பர.2குளி 8.00 ஆகும்.இதற்கு எல்லை

வடக்கு - தியாகராசா பெண் கனகாம்பிகையின் ஆதனம்
கிழக்கு - செல்லையா பொன்னம்பலத்தின் ஆதனம்.
தெற்கு - இராஜரட்ணம் பொன்னம்பலத்தின் ஆதனம்
மேற்கு - கையொழுங்கை

தற்போது இவ்வாதனத்தை இராஜரட்ணம் நீலகண்டன் அபிலாஷ் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர்.எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது இராஜரட்ணம் நீலகண்டன் அபிலாஷ் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்.

மாநகரசபை
யாழ்ப்பாணம்.

நைஜீரியாவில் தற்கொலைத் தாக்குதல்: 14 பேர் உயிரிழப்பு; 29 பேர் காயம்

2 பெண்கள் உட்பட நால்வர் ஒரே நேரத்தில் பாய்ச்சல்



மைதுகுரி,நவ.17

நைஜீரியாவில் ஒரே இடத்தில் 2 பெண்கள் உள்ளிட்ட 4 தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடபகுதியில் இஸ்லாமிய தேசம் அமைக்கும் முயற்சியில், கொடூரமான தாக்குதல்களை நடத்தி வரும் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு பொது மக்களையும் கடத்திக் கொலை செய்து வருகிறது. மைதுகுரி மற்றும் பிற பகுதி களில் தொடர்ந்தும் தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. பெண்கள், குழந்தைகளை இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன் படுத்துகிறது.

இந்தநிலையில், போர்னோ மாநிலத் தலைநகரான மைதுகுரியில் நேற்றுமுன் தினம் 4 தற்கொலை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மூனா கரி புறநகர்ப் குதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 பேர் கொல் லப்பட்டனர்; 29 பேர் பலத்த காய மடைந்து மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்திய இரண்டு பெண்கள் உள்ளிட்ட 4 பேரும் இறந்தனர்.

இந்தத் தாக்குதல் காரணமாக அப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

போகோ ஹராம் தீவிரவாதிகளை அவர்களின் ஆதிக்கப் பகுதியில் இருந்து விரட்டியடித்துவிட்டோம் எனக் கடந்த ஆண்டு அரசு தெரிவித்தது. ஆனால், அரசுக்கு மீண்டும் சவால் விடும் வகையில் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மரண தண்டனை குற்றவாளி ட்ரம்ப்!



சியோல்,நவ.17

கிம் ஜாங் உன் தோற்றத்தை விமர்சித்த ட்ரம்ப் கொடூரமான குற்றவாளி என்பதையும், கொரிய மக்களால் மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளவர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என வடகொரியாவின் ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது சமீபத் திய ஆசிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை வடகொரியாவுக்கு எதிராக ஆதரவு திரட்டும் பயணமாக அமைத்துக்கொண்டார். அந்த நாட்டை அணு ஆயுதங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளைக் கைவிடச்செய்வதில் அவர் உறுதியாக உள்ளார்.

இந்தப் பயணத்தின்போது வியட்நாமில் வைத்து அவர் டுவிட்டரில் வெளியிட்ட ஒரு பதிவில், வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன் தன்னை முதியவர் என்று விமர்சிக்கிறாரே என ஆதங்கம் தெரிவித்தவர், அதே பதிவில் அவரை குள்ளமானவர், குண்டர் என அழைக்க மாட்டேன் என மறைமுகமாக விமர்சித்தார்.

இது வடகொரியாவில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த நாட்டின் ஆளுங்கட்சி பத்திரிகை 'ரோடாங் சின்முன்' இதுபற்றித் தலையங்கக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளது. அது ட்ரம்பைப் பலவாறு சாடி உள்ளது.

அதில், வடகொரியாவின் மாபெரும் தலை மையின் கௌரவத்துக்கு இழுக்குச் சேர்க்கிற வகையில் விமர்சித்த குற்றம், மன்னிக்க முடி யாத மோசமான குற்றம். அவர் (ட்ரம்ப்) கொடூர மான குற்றவாளி என்பதையும், கொரிய மக்க ளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளவர் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(ப)

சீனாவில் கடும் பனிமூட்டம்:

30 வாகனங்கள் மோதல்; 18 பேர் பரிதாபச் சாவு



பீஜிங்,நவ.17

சீனாவில் நிலவிவரும் கடும் பனிமூட்டத்தால் நேற்றுத் தேசிய நெடுஞ்சாலையில் 30 வாக னங்கள் ஒன்றோடொன்று வரிசையாக மோதிய விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள அன்ஹுயி மாகாணத்தில் தற்போது பனிப்பொழிவும், பனி மூட்டமும் கடுமையாக உள்ளது. இந்த நிலையில் இங்குள்ள புயாங் நகரில் உள்ள தேசிய விரைவு நெடுஞ்சாலை பனிப்படலத்தால் மூடப்பட்டி ருந்தது.

இந்தப் பனிமூட்டத்துக்கு இடையில் அந்த வழியாகச் சென்ற சுமார் 30 வாகனங்கள் ஒன்றோ டொன்று வரிசையாக மோதிக்கொண்ட விபத்தில் பல வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. இந்தக் கோர விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், காயமடைந்து வைத்திசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் 19 பேரில் சிலரது நிலைமை கவ லைக்கிடமாக உள்ளது எனவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ப)

சர்வாதிகாரத்தால் உலகை பணியவைக்க முடியாது

ட்ரம்ப் எச்சரிக்கை

சர்வாதிகாரத்தால் உலகை மிரட்டிப் பணியவைக்க முடி யாது என வட கொரியாவுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

உலக நாடுகளின் எதிர்ப் பையும் மீறி வடகொரியா அணு ஆயுத ஏவுகணைச் சோதனை களைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக வட கொரியா மீது இராணுவ நடவ டிக்கை எடுப்போம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்ச ரிக்கை விடுத்து வருகின்றார்.

ஆனாலும் அமெரிக்கா வைக் கண்டுகொள்ளாத வட கொரியா, தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத் தல் ஏற்பட்டால் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பானை அணு குண்டுகளை வீசி அழித்து விடுவோம் என அதிபர் கிம் ஜோங் உன் மிரட்டல் விடுத் துள்ளார். வடகொரியாவுக்குச் சீனாவும் ரஷ்யாவும் மறைமுக ஆதரவு அளித்து வருகின்றன.

இதற்கிடையே வடகொரிய அரசுசார்பில் ரஷ்ய அதிபர் விளா டிமிர் புடினுக்குச் சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள் ளது. அதில் அமெரிக்கா மீது அணு ஆயுதப் போர் தொடுக் கத் தயங்க மாட்டோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சர்வாதிகாரத்தால் உலகைமிரட்டிப்பணிய வைக்க முடியாது என வடகொரி யர்வுக்கு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள் ளார்.

குண்டுக் காயங்களுடன் 15 பேரின் சடலங்கள்

பாகிஸ்தானில் புலோடா என்ற இடத்தில் பொலிஸார் வழக்கமான ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் 15 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத் தலைநகர் குவெட்டாவில் ஈரான் நாட்டின் எல்லையையொட்டி உள்ள புலோடா என்கிற இடத்தில் பொலிஸார் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு துப்பாக்கிக் குண்டுக் காயங்க ளுடன் 15 பேரின் உடல்கள் கண்டெடுக் கப்பட்டன. அங்கு ஒரு சில ஆவணங் களும் கிடைத்துள்ளன எனத் தெரிவிக் கப்படுகிறது.

அவர்கள் 15 பேரும், பாகிஸ்தானில் இருந்து ஈரானுக்குச் சட்ட விரோத மாகச் செல்ல முயற்சித்து உள்ளனர் என்பது அந்த ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் 15 பேரும் மர்ம நபர்களால் கடத்தப்பட்டனர் என நேற்றுமுன்தினம் பொலிஸில் வழக்குபதிவானமைகுறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

மத்தியூஸின் வருகையால் நம்பிக்கை அதிகரித்துள்ளது

சந்திமால்

அஞ்சலோ மத்தியூஸின் வருகை எங்களது துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்தியுள்ளது என இலங்கை அணித் தலைவர் சந்திமால் கூறியுள்ளார்.

அஞ்சலோ மத்தியூஸின் வருகை எங்களது துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்தியுள்ளது. அவர் 4ஆவது வரிசையில் துடுப்பாட்டம் செய்வார். அவரது அனுபவம் எங்களுக்குச் சாதகமாக இருக்கும். அவர் தனது மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம். ஆனால் பின்னங்கால் காயத்தில் இருந்து மீண்டு வந்திருக்கும் அவர் ஒரு துடுப்பாட்ட வீரராக மட்டுமே இடம் பெறுவார். காயப் பிரச்சினையால் துரதிர்ஷ்டவசமாக அவரால் டெஸ்டில் பந்து வீச முடியாதமை, எங்களுக்குச் சற்றுப் பின்னடைவு தான்.

கொல்கத்தாவில் கடைசியாக நாங்கள் விளையாடிய தொடரில்(ஒரு நாள் போட்டி) வேகப்பந்து வீச்சைத் திறம்படச் சமாளித்தோம். பவுன்ஸ் ஆகக்கூடிய ஆடுகளத்தில் சிறப்பாக விளையாடும் நம்பிக்கையில் இருக்கின்றோம். நல்ல தொடக்கம் அமைவது அவசியம். முதல் 4 துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தோழியை மணக்கும் கிரிக்கெட் வீராங்கனை

ஆஸ்திரேலியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் மெகன் ஸ்கட் தனது தோழியை விரை வில் மணக்க இருக் கின்றே றன் என டுவிட்டரில் தெரி வித்துள்ளார்.

ஆஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மெகன் ஸ்கட். ஓரினச் சேர்க்கை விரும்பியான இவர் தனது தோழி ஜெஸ் ஹோலியாக்குடன் நெருங்கிப் பழகி வந்தார். தற்போது ஆஸ்திரேலியாவில் ஓரினச் சேர்க்கை யாளர் திருமணத்தைச் சட்ட பூர்வமாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.இதையடுத்து தனது நீண்ட காலத் தோழியை விரைவில் மணக்க இருக்கின்றேன் என 24 வயதான மெகன் ஸ்கட் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20 கோவில் ஒழுங்கை ஆதன இல.72 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் சாகுல் கமீட் பெண் சதக்கத் உம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சோனகத்தெரு முஸ்லிம் வட்டாரம், இல.72, பாக்கியப்பா ஒழுங்கையை முன்னைய முகவரியாகவும் புத்தளம் இல. 19, ஐந்தாம் குறுக்குத்தெருவை தற்போதைய வதிவிட முகவரியாகவும் கொண்ட மொஹிதீன் பிச்சை ஹசன் மகள் சம்சூனா என்பவாரால் பிரசித்த நொத்தாரிசு ஜனாப் M.M.மன்சூர் முன்னிலையில் 1990.03.12ஆம் திகதிய நிறைவேற்றப்பட்ட அறுதிச்சாதனத்தின் பிரகாரம் கொள்வனவு செய்திருந்தாரென்றும் 1990.10.30 ஆம் திகதி குடாநாட்டை விட்டு முஸ்லிம் சமூகத்தினரும் வெளியேறிய நிலையில் குறித்த ஆதனத்தின் உறுதியை எடுத்துச் செல்லவில்லை என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் குறித்த ஆதனத்தின் அறுதிசாதனத்தை கண்டு பிடிக்க முடியாதநிலையில் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் உறுதி இல. 978/2005.07.09 ஆம் திகதி வெளிப்படுத்துகை சாதனம் நிறைவேற்றியுள்ளார் என்றும் வெளிப் படுத்தியுள்ளார்.

இதே நொத்தாரிசு முகதாவில் 2015.07.16 ஆம் திகதியில் 985 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலமாக புத்தளம் மரிக்கார் றோட் இல.7/5 வதியும் யாழ்ப்பாணத்தில் மேலே குறிப்பிட்ட முகவரியைச் சேர்ந்த மொஹிதீன் பிச்சைஹசன் மகள் சம்சூனா, யாழ்ப்பாணம் நாவாந்துறை இல. 56 கோவில் ஒழுங்கையில் வதியும் சின்னத்தம்பி முத்துராசாவிற்கும் பெண் தவமணி தேவிக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

இதே நொத்தாரிசு முகதாவில் 986ஆம் இல 2005.07.16 திகதிய அறுதி உறுதி மூலம் சின்னத்தம்பி முத்துராசாவும் மனைவி தவமணிதேவியும், யாழ்ப் பாணம் நாவாந்துறை மண்பிட்டியில் வதியும் தியாகராசா சுதாகரனுக்கும் மனைவி லதாவுக்கும் விற்றுள்ளார். அதே நொத்தாரிசு முகதாவில் 2010.05.25ஆம் திகதியில் 2622ஆம் இல அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிபந்தனை அறுதி மூலமாக நாவாந்துறை இல. 56 கோவில் வீதியில் வதியும் தியாகராசா சுதாகரனும் மனைவி லதாவும் யாழ்ப்பாணம் கொட்டடி இல. 91/18, வில்லூன்றிக்கேணி வீதியில் வதியும் நாகலிங்கம் கேதீஸ்வரனுக்கும் நிபந்தனை அறுதியாக வழங்கியுள்ளனர்.இதே நொத்தாரிசு முகதாவில் 2825ஆம் இலக்க 2011.06.17ம் திகதி அறுதி உறுதியில் நாகலிங்கம் கேதீஸ்வரனும் மனைவி தங்கமலரும், தியாகராசா சுதாகரனும் மனைவி லதாவுக்கும் மீள அறுதியாக வழங்கியுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 8322ஆம் இல 2011.11.03ஆம் திகதி அறுதி உறுதியில் நாவாந்துறை, கோவில் வீதி, இல. 70ஏ இல் வசிக்கும் தியாகராசா சுதாகரனும் பெண் லதாவும் அவ்வூர் நாவலர் வீதி இல 75 குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்குக்கும் பெண் அமலஜோதிக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விவரம்:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதிஇ வண்ணார்பண்ணை கோவில் பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை 'ஓறணி' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜ் அவர்களின் வரைபட இல 2781/2005.06.27 இல் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நிலபர 00 குளி 15.96 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு:- மொகமட் அப்துல் காதர் பெண் மல்மூன்
வடக்கு:- A.P லேன்
மேற்கு:- மொகமட் மொகிடீன் பெண் பாத்துமா நாச்சியார்
தெற்கு:- ஒழுங்கை

தற்போது இவ் ஆதனத்தை குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்கும் பெண் அமலஜோதியும் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறு உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்கும் பெண் அமலஜோதி என்ற பெயரிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 6, கொய்யாத்தோட்டம் புது வீதி, ஆதன இல.15/2 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வஸ்தியாம்பிள்ளை அருமை நாதன் பெண் டெசி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம், இல 3/1 புது வீதி வஸ்தியாம்பிள்ளை அருமைநாதரும் பெண் டெய்சியும் அதே இடத்தைச் சேர்ந்த பாக்கியநாதர் ஹென்றி யோசேப் இம்மானுவலும் பெண் பேர்ணடேற்றும் ஆகிய இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 7939/23.07.1989 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நிபந்தனை அறுதி உறுதி மூலம் ரூபா 200000/= ஐ ஒன்றரை(1 1/2)வருடத்திற்குள் வருடத்திற்கு 48% வட்டியுடன் சேர்த்து திருப்பித் தரும்பட்சத்தில் மீள தங்களது பெயரிற்கு அறுதியுறுதி முடித்து தர வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவாக அறுதியாக.விற்றுள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 3792/2006.06.29 ஆம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம், புது வீதி, இல. 15/11, பாக்கியநாதர் கென்றி யோசேப் இம் மானுவலும் பெண் பேர்ணடேற்றும் குறித்த காலத்தவணை முடிவுற்றும் பஸ்தியாம்பிள்ளை அமிர்தநாதரும் பெண் டெய்சியும் குறித்த சிரத்தையுடன் வட்டியையும் கட்டி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தவில்லை என்றும், அவர்களால் செலுத்தமுடியாத நிலையை வெளிப்படுத்தி ஆதனத்தின் ஆட்சியை 1994.09.09ஆம் திகதியிலிருந்து தாம் பெற்றுள்ளதாகவும் குறித்த ஆதனம் தங்கள் கொள்வனவும் ஆட்சியுமென்றும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதே நொத்தாரிசு முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3793/2006.06.29 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியிலிருந்து தற்காலம் வவுனியா திருநாவற்குளம் இல. 45/51இல் வசித்து வரும் பாக்கியநாதர் கென்றி யோசேப் இம்மானுவலும் பெண் பேர்ணடேற்றும் என்பவர்களிடமிருந்து கொய்யாத்தோட்டம் புது வீதி, இல. 59ஐச்சேர்ந்த அமிர்தலிங்கம் புஸ்பகுமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரியும் அறுதியாக பெற்றுக் கொண்டுள்ளனர்.

பிரசித்த நொத்தாரிசு N.தில்லைவினாயகம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 6427/2011.11.16 இலக்க நிபந்தனை அறுதி மூலமாக அமிர்தலிங்கம் புஸ்பகுமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரியும், தனபாலசிங்கம் பெண் திலக ராணிக்கு நிபந்தனை அறுதியாக விற்றுள்ளனர்.பிரசித்த நொத்தாரிசு க.நம நாதன் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 529/2014.05.03 ஆம் இலக்க அறுதி உறுதி மூலமாக துரைராசா தனபாலசிங்கமும் பெண் திலகராணியும் குறித்த அமிர்தலிங்கம் புஸ்பகுமாருக்கும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரிக்கும் மீள அறுதியாக வழங்கியுள்ளனர்.இதே நொத்தாரிசு முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 530/2014.05.03 சீதன உறுதி மூலம் அமிர்தலிங்கம் புஸ்பகுமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரியும் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பிரதீஸ்குமாரன் பெண் டிலானி நிரோஷாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

ஆதன விவரம் :- யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை 'புளியடி வயலும் புளியடியிற் புலமும் முதலைக்குளம் புலமும்'இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.தேவராஜா அவர்களின் 1169/1994.12.08 இலக்க வரைபடத்தில் துண்டு-1எனச் சுட்டப்பட்ட நில.பர.01குளி 00.42ஆகும்.இதற்கு எல்லை

கிழக்கு:- ஒழுங்கை
வடக்கு:- பி;.எச்.ஜே.இம்மானுவல் பெண் பெர்ணடேற்றின் ஆதனம்
மேற்கு:- பிரான்சிஸ் யோசேப்புக்கும் பெண் ஞானமலருக்குரிய ஆதனம்.
தெற்கு:- அருமைநாதன் பெண் டெய்சியின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை பிரதீஸ்குமாருக்கும் பெண் டிலானி நிரோஷாவும் தமதுபெயரிற்குஎமது பதிவேட்டில்பெயர்மாற்றம்செய்வதற்குவிண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பிரதீஸ்குமாரன் பெண் டிலானி நிரோஷா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

உலகக் கிண்ண உதைபந்து: ஆஸ்திரேலிய அணி தகுதி

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்துப் போட்டிக்கு ஆஸ்திரேலியா அணி தகுதி பெற்றுள்ளது.

21ஆவது உலகக் கிண்ண உதைபந்துப் போட்டி அடுத்த ஆண்டு (2018) ரஷ்யாவில் ஜூன் 14ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தப் போட்டியில் 32 அணிகள் பங்கேற்கும். போட்டியை நடத்தும் ரஷ்யா தவிர எஞ்சிய 31 அணிகளும் தகுதிச் சுற்றுப் போட்டிகள் மூலமே நுழைய முடியும்.

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் நேற்று முன்தினம் நடந்த பிளே-ஓவ் சுற்றின் 2ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா-ஹோண்டுரஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. பின் பாதியில் அசத்திய ஆஸ்திரேலிய அணி 3:1 என்ற கோல் கணக்கில் ஹோண்டுரஸ் அணியை வீழ்த்தியது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி தொடர்ச்சியாக 4ஆவது முறையாக உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்துப் போட்டிக்கு இதுவரை 31 அணிகள் தகுதி பெற்றுள்ளன. எஞ்சிய ஓர் இடத்துக்கான ஆட்டத்தில் நியூ சிலாந்து-பெரு அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி உலகக் கிண்ணப் போட்டிக்குள் அடியெடுத்து வைக்கும்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த உதைபந்து வீரர் ஒருவர், லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தில் இணைந்தது, அவரது குடும்பத்தினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இளைஞர்களிடையே தீவிரவாதத்தை வேரூன்றச் செய்யும் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இளைஞர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு, தீவிரவாத இயக்கங்களில் சேர்க்கப்படுகின்றனர். தீவிரவாதத்தால் தூண்டப்படும் இளைஞர்களின் நடவடிக்கைகள் மற்றும் வன்முறைகள் காவல் துறைக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் 20 வயதே நிரம்பிய மாவட்ட அளவிலான இந்திய உதைபந்து வீரர் மஜித் கான், சில தினங்களுக்கு முன் தீவிரவாத இயக்கத்திற்காக ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார். இதனால் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என அனைவரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஏ.கே.-47 துப்பாக்கியுடன் அவரது புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தீவிரவாத இயக்கத்தில் உதைபந்தாட்ட வீரர்

குடும்பத்தினர் அதிர்ச்சி



31 ஆவது வயதில் சானியா மிர்சா

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா நேற்றுமுன்தினம் தனது 31 ஆவது பிறந்த நாளைக் குடும்பத்தினருடன் எளிய முறையில் கொண்டாடினார்.

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவுக்கு நேற்றுமுன்தினத்துடன் 31ஆவது வயது பிறந்ததுள்ளது. அவர் தனது பிறந்த நாளைக் குடும்பத்தினருடன் எளிய முறையில் கொண்டாடினார். சானியா மிர்சாவுக்கு அவரது கணவரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருமான சோயிப் மாலிக் டுவிட்டர் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில், 'பிறந்த நாள் காணும் எனது அழகிய மனைவிக்கு வாழ்த்துகள். இந்த தருணத்தில் அருகில் இருக்க முடியாததை நினைத்து வருந்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா உட்பட

பிரபலங்கள் பலரும் சானியா மிர்சாவுக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தை அலங்கரித்த சானியா மிர்சா, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெண்கள் இரட்டையர் பிரிவில் 3 பட்டங்களையும், கலப்பு இரட்டையரில் 3 பட்டங்களையும் வென்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

நான் ரோபோ இல்லை – விராட் கோஹ்லி

வீரர்களுக்கு ஓய்வு அளிப்பது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த விராட் கோஹ்லி நான் ஒன்றும் ரோபோ இல்லை, எனக்கும் ஓய்வு தேவைப்படுகிறது என பதிலளித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி இந்த ஆண்டு மட்டும் 7 டெஸ்ட், 26 ஒருநாள் மற்றும் 10 ரி-20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். மேலும் இந்திய பிரீமியர் லீக்கின் 10ஆவது பருவகாலத் தொடரிலும் 10 போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்த ஆண்டு அதிக போட்டிகளில் விளையாடிய இந்திய வீரர் விராட் கோஹ்லி ஆவார்.

தற்போது இந்திய அணி இலங்கையுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த நிலையில் இந்தப் போட்டிக்கு முன்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் விராட் கோஹ்லி கலந்துகொண்டு பேசினார்.

அப்போது ஹர்திக் பண்டையாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டமை பற்றி அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த கோஹ்லி, 'நான் ஒன்றும் ரோபோ இல்லை எனக்கும் ஓய்வு தேவைப்படுகிறது' எனக் கூறினார்.

மூன்று விதமான போட்டிகளில் விளையாடுபவர்கள் ஒரேவிதமான தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள இயலாது. அதைத் தக்க வைத்துக் கொள்ள நிச்சய

மாக ஓய்வு தேவை, எனக்கும் ஓய்வு தேவை. என் உடல் ஓய்வெடுக்க வேண்டும் என்று நினைக்கும் போது, நான் அதைக் கேட்பேன். நான் ஒன்றும் ரோபோ இல்லை, என் சதையைக் கிழித்துப் பார்த்தால் எனக்கும் இரத்தம் தான் வரும் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிமைத்திரிபாலசிறி சேனவுக்கும் வடக்கு - கிழக்கில் இருந்து சென்ற காணாமற் போனோரின் உறவினர்களுக்கும் இடையே நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பு உருப்படியான முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போதே காணாமற்போனவர்கள் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை முன்னெடுப்பதற்குத் தான் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் எனக் காணாமற் போனோரின் உறவினர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால கூறியுள்ளார்.

அத்துடன் காணாமற்போனவர்களின். உறவினர்களது முறைப்பாடுகள், கோரிக்கைகள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்கானபுதியவிண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலாளர்களின் ஊடாக வழங்குவதற்கும், இந்தவிண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அங்கு உறுதியளித்துள்ளார்.

இந்தச்சந்திப்புநேற்றுஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் மத்தியில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையுடனும் அரசு செயற்படுகிறது.

அரசின் இரகசியத் தடுப்பு முகாம்கள்எதுவும்தற்போதைய அரசின் கீழ் செயற்படவில்லை. எவருமே அவ்வாறு இரகசியமாகத்தடுத்துவைக்கப்படவில்லை. காணாமற்போனோரின் பிரச்சினைக்குத் துரிதமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கே நான் எதிர்பார்த்துள்ளேன்.

இதற்காகப் புதிய விண்ணப்பப்படிவம்ஒன்றுதயாரிக்கப்பட்டு எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் காணாமற் போனோர்தொடர்பானமுழுமையான தகவல்களும் திரட்டப்படவுள்ளன.

இதனடிப்படையில்மீண்டும் விசாரணைகள்முன்னெடுக்கப்படவுள்ளன. - என்றார்.

ஜனாதிபதியின் இந்தக்கருத்தினால்காணாமற்போனவர்களின் உறவினர்கள் மிகுந்த விசனத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தப்பிரச்சினைக்குஜனாதிபதி ஓர் இறுதித் தீர்வைத் தருவார் என்ற நம்பிக்கையில் சென்றஎமக்குஏமாற்றமேமிஞ்சியது என்றும், மீண்டும் விசாரணைகளை முன்னெடுப்பது என்பது இந்த விடயத்தில் அரசு காலம் கடத்துவதற்கு எண்ணுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றதுஎன்றும்அவர்கள் கூறினர்.

ஏற்கனவேமகிந்தஅரசின் காலத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பில் சாட்சியங்கள் திரட்டப்பட்டதுடன்விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த விசாரணைகளில் அடிப்படையில்இறுதிஅறிக்கை ஒன்றும் அரசிடம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்மீண்டும் ஒரு விசாரணை நடத்துவது என்பது காலத்தை இழுத்தடிக்கும் செயற்படாகவே அமையும். இதன்மூலம்உண்மைகள்வெளிவரப் போவதில்லை என மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நேற்றையசந்திப்பில்ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, நல்லிணக்க அமைச்சின்செயலாளர்வி.சிவஞானசோதிஉள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

நல்லாட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

திட்டத்துக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும்அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸும் ஆதரவாக வாக்களித்துடன், பொது எதிரணியும், ஜே.வி.பியும் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தன. பொது எதிரணியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை.

2018ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த 9ஆம் திகதி நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 10,11,13,14,15,16ஆம் திகதிகளில் இதன்மீது இரண்டாம் வாசிப்பு இடம்பெற்றது.

ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்கநேற்றுஇடம்பெற்ற இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பைக் கோரியிருந்தார்.

அதன் அடிப்படையில் நேற்றைய விவாதத்தைத் தொடர்ந்து மாலை 5.20 மணிக்கு இரண்டாம் வாசிப்பு மீதுநடைபெற்றஇலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆரவாக 151 வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அத்துடன், எதிராக 58 வாக்குகள் கிடைத்திருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளிநாடு சென்றுள்ளமையால் வாக்களிப்பில் பங்கேற்க வில்லை என கூறப்பட்டது.கூட்டமைப்பின்மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனும் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

இதேவேளை, தேசிய அரசு மீது கடும் குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார் என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்ஊழல் -மோசடி வழக்குகளின் விசாரணைகளை தாமதப்படுத்துகிறார் என்றும் கூறி அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டவிஜேதாஸ ராஜபக்ஷவும் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மத்தியில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்புளொட்தலைவருமான த.சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

பக்கம் 03 »»

அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ராஜபக்ஷ முன்னிலையில் சபையில் கோரிக்கை முன்வைத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவருமான இரா.

பக்கம் 03 »»

அதிரடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தேக நபர்கள் இருவரின் விளக்கமறியலை எதிர்வரும் 30ஆம் திகதி வரை யாழ்ப் பாணம் நீதிவான் மன்று நீடித்தது.

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ். அரியாலை கிழக்கு மணியந்தோட்டம், வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதியில் டொன் பொஸ்கோ ரிச்மன் (வயது-24) என்பவர்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். இந்த இளைஞர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்தொடர்பானவிசாரணைகளை யாழ்ப்பாணத் தலைமையகப்பொலிஸார்மேற்கொண்டனர்.எனினும்பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம்இந்தவழக்குவிசாரணை ஒப்படைக்கப்பட்டது.

யாழ். பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமில் பணியாற்றும்,உதவிப்பொலிஸ் பரிசோதகர் மல்லவாராச்சி பிரதீப்நிசாந்த, கான்ஸ்டபிள்ரத்நாயக்கமுதியான்சலாகே இந்திகபுஷ்பகுமார ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இருவரும் நேற்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களைச்சாட்சி அடையாளம்காட்டவில்லை.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது, கொல்லப்பட்ட இளைஞனைமோட்டார்சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவரது நண்பரே இந்த வழக்கின் சாட்சியாவார்.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப் பட்டவை எனத் தெரிவித்து யாழ்ப் பாணம் பண்ணையி லுள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமுக்குள் மீட்கப்பட்ட ஓட்டோ, மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்துப்பாக்கி என்பனவற்றை இந்த வழக்கின் சான்றுப் பொருள்களாக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் நேற்றுப் பாரப்படுத்தினர்.

நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கோர்ப்பார்கள்.

இவ்வாறுமுன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான 6ஆம் நாள் விவாதம், நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மஹிந்த ராஜபக்ஷ இதனைக் கூறினார்.

கடந்த இரண்டரை வருடங்களாக உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலைநல்லாட்சி அரசு ஒத்திவைத்து வருவதை வன்மையாகக்கண்டித்தஅவர்,தமது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்ததில்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

தமது ஆட்சிக்காலத்தில் கடனைச் செலுத்த முடியாமல் ஒருபோதும் அழவில்லை என்றும், சர்வதேச அமைப்புக்கள் போடும்தாளங்களுக்குத்தான் நடனமாடவில்லை எனவும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சர்வதேசத்தை வெற்றி கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இந்த நல்லாட்சி அரசு சர்வதேச அழுத்தங்கள் இல்லாத சூழ்நிலையில் கடன் சுமைகளை அதிகரித்துக் கொண்டதாகவும், எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் இலங்கையின் பணவீக்கம் மூன்று மடங்கில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் கூறினார்.

மூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தும்விடுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.குடாநாட்டின்மூலை முடக்கெல்லாம் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனிடம் எடுத்துரைத்தார் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னான்டோ.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்றுக் காலை மேல் நீதிமன்றநீதிபதிக்கும்பொலிஸ்உயர் அதிகாரகளுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சட்டமா அதிபரின் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதி அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த் பங்கேற்றார்.

இதன்போதே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னான்டோ மற்றும் யாழ். பிராந்நியசிரேஷ்டபொலிஸ்அத்தியட்சகர், உதவிப்பொலிஸ்அத்தியட்சகர்மற்றும்யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வாள்வெட்டுச் சம்பவங்களைக்கட்டுபடுத்தும்வகையில் அவற்றில்ஈடுபடும்குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு வடமாகாணத்தின் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபருக்குயாழ்மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவசர பணிப்புரையை பிறப்பித்துள்ளார்.

வாள்வெட்டு தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களை. பிணையில்விடுவிக்கக்கோரும் பிணை மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

யாழ்ப்பாணத்தில்வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் சாதாரண மக்களின் அன்றாடவாழ்க்கைபாதிப்படைந்தும்-அச்சத்திலும்காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்தக்கைக்குண்டுவைத்திருந்தமற்றும் வாள்வெட்டு போன்ற சம்பவங்களில் ஈடுபட்ட நபருக்குப் பிணை வழங்குவது சமூகத்தின் பாதுகாப்பைமேலும்கேள்விக்குள்ளாகி விடும் என அரச சட்டவாதி குறிப்பிட்டு அந்தப் பிணை மனுவுக்குஆட்சேபனைதெரிவித்தார்.

இதனை தொடர்ந்து நீதிபதி அந்தப் பிணை மனு விசாரணையை ஒத்திவைத்ததார். வாள்வெட்டு கலாசாரத்தை உடன் முடிவுக்குக் கொண்டு வரும்வகையிலேயேநேற்றைய கூட்டம் நடைபெற்றது.

கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பட்டனர்.

கடந்தமாதம்பருத்தித்துறை அபான்ஸ் காட்சியறை உடைக்கப்பட்டுப் பல பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில்நேற்று15கையடக்கத் தொலைபேசி களுடன் இருவர்கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறையைவதிவிடமாகக் கொண்ட 21 மற்றும் 23 வயதுடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்தார்மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்.

யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றில் நேற்றுக் காலை மேல் நீதிமன்றநீதிபதிக்கும்பொலிஸ்உயர் அதிகாரிகளுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே நீதிபதி இந்த உத்தரவை விடுத்தார்.

சட்டம்ஒழுங்குக்குஅச்சுறுத்தலாகவுள்ளவாள்வெட்டுகலாச்சாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் பொலிஸ் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பயன்படுத்தவேண்டும். சமூகத்தவர்களுக்குஅச்சுறுத்தலானவாள்வெட்டுத்தாக்குதலில் ஈடுபடுவர்களைக்கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்எனவும்நீதிபதிஇளஞ்செழியன் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக்காட்டினார். (107)

அதிகாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் நேற்று அதிகாலை மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலி ஸாரால் நேற்று முன்தினம் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம்முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளின் அடிப்படையிலேயே நேற்று அதிகாலை இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட் டனர் என்றும் பொலிஸார் கூறினார்.

வாள்களுடன்நடமாடியகுற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமைமூவர்கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் நல்லூர், கோவில் வீதியைச் சேர்ந்த ஞானசேகரம் விஜித்பாரத் (வயது-21) என்ற இளைஞரைத் தவிர ஏனைய இருவரும் விசாரணைகளின்பின்னர்விடுவிக்கப்பட்டனர்.

அவர்களிடம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் நல்லூரைச்சேர்ந்தவரதராஜன்இந்திரஜித் (வயது - 21), கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த தவராஜாநிக்ஸன்(வயது-20),உரும்பிராயைச் சேர்ந்த அன்பழகன் சாருக்ஸன் (வயது - 21) ஆகிய 3 இளைஞர்கள் நேற்று அதிகாலைகைது செய்யப்பட்டனர்.

இவர்கள்நால்வருமேஆனைக்கோட்டை லோட்டஸ் வீதியில் கடந்தசெவ்வாய் இரவுவீடொன்றுக்குள்புகுந்துஒரு வரைவெட்டிக்காயப்படுத்தியதுடன், அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

இவர்களின்வாள்வெட்டுக்கு இலக்காகி குலசிங்கம் குலபிரதீபன் (வயது-35)என்பவர் படுகாயமடைந்தார்.

சந்தேகநபர்கள்விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப் படுவர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம்.

கொழும்பு, கண்டி, மாத்தறை மற்றும் எம்பிலிப் பிட்டிய பகுதிகளைச் சேர்ந்த ஆறு

பக்கம் 03 »»

விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

செய்வது நல்லதே. அவர் அப்படிச் சொல்வதும் நான் இப்படிச் சொல்வதும் நல்லதுதானே.

பக்கம் 03 »»

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டும் திட்டம்!

கொழும்பு, நவ. 17

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் செங்கல் மற்றும் சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை இலங்கை அரசு மேலும் நீடித்துள்ளது.

அத்துடன், இந்த வீடுகளை அமைப்பதற்கான நியமங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல் மற்றும் சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான செலவு உருக்கு வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்படும் செலவை விட அதிகமான போதிலும், உருக்கு வீடுகளுக்கு வடக்கு - கிழக்கு மக்கள் தமது எதிர்ப்பைக் காண்பித்த நிலையில் செங்கல் மற்றும் சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகளைக் கையளிப்பதற்கான கால அவகாசம் நவம்பர் 27 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைக் கையாளும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு செங்கற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சிமெந்தினாலான வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகளுக்கான வேண்டுகோள் அடங்கிய பின்னிணைப்பு ஒன்றைத் தனது திட்டத்துடன் இணைத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் சில இடங்களில் செங்கற்களைப் பெற்றுக்கொள்வது சிரமம் என்பதன் காரணமாக சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தில் கட்டு மானச் செலவுகள் குறைக் கப்பட்டு மூலப் பொருள்களுக்கான செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ஆற்று மண்ணைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரை முன்னர் முன் வைக்கப்பட்ட போதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகக் கடற்கரை மணல் மற்றும் சாணை மணல் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மரத்தைப் பயன்படுத்துவது தொடர்பிலும் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது இவ்வீட்டுத் திட்டத்தின் கீழ் முன்னர் முதிர்ந்த மரங்களைப் பயன்படுத்தியே அனைத்துக் கதவுகளும் போடப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

விதிமுறைகள் தளர்வு

ஆனால், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்தை அடுத்து வீட்டின் முன்கதவு மற்றும் பின்கதவு ஆகியன மட்டும் முதிர்ந்த மரப்பலகைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

வீட்டின் உள்கதவுகள் வீட்டு உரிமையாளரின் விருப்பிற்கேற்ப எந்த வகையான மரத்திலும் போடப்பட முடியும் எனவும் இதேபோன்று மலசல கூடத்திற்கான கதவும் சாதாரண மரத்தில் இடப்படலாம் எனவும் திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் நீடித்த பயன்பாட்டைக் கொண்ட வீடு அமைக்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்காகும்.

கொத்தனார் வீடுகள் வடக்கு கிழக்கின் கலாசாரம், வாழ்வு முறைமை மற்றும் காலநிலை போன்றவற்றுக்குப் பொருத்தமான வீட்டு மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், இலங்கை அரசும் இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் விரும்பும் இவ்வாறான கொத்தனார் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளமை மகிழ்ச்சி தருவதாக வீடமைப்பு நிறுவனம் ஒன்றால் அண்மையில் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீடுகளைக் கட்டுவதற்கு வீட்டின் உரிமையாளர்களும் தமது பங்களிப்பை வழங்குவது மிகவும் முக்கியமானது எனவும் இதன் மூலம் கிராமங்களில் வாழும் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறமுடியும் எனவும் இது வடக்கு, கிழக்கு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவும் எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயனாளிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள ஆலோசனைகளைத் தொடர்ந்து சூழல் நேயம்மிக்க வீடுகளைக் கட்டுவதற்கான பொருத்தமான தெரிவுகள் இத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொத்தனார் வீடுகள் என்பது செங்கற்களால் மட்டுமல்லாது, சிமெந்துக் கற்கள் போன்றவற்றைக் கொண்டும் கட்டப்பட முடியும். ஆகவே, செலவைக் கருத்திற் கொண்டும் சூழலுக்குப் பொருத்தமான வீடுகள் தெரிவு செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக வடக்கைப் பொறுத்தளவில் செங்கல் வீடுகள் பொருத்தமானவையல்ல. தற்போது இவ்வாறான சில பிரச்சினைகள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சால் தயாரிக்கப்பட்ட வீட்டுத் திட்ட அறிக்கையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சமுதாயப் பங்களிப்புடன் கூடிய வீடுகளைக் கட்டுவதற்கான அனுமதியை நல்லிணக்க அமைச்சின் பரிந்துரைகளுக்கான வேண்டுகோள் மிகக் குறைந்த அளவிலேயே வழங்கியுள்ளதாகவும் இதற்குப் பதிலாக ஒப்பந்தகாரர் மைய அணுகு முறை முன்னுரிமைப் படுத்தப் பட்டுள்ளதாகவும் வீடுகளை நிர்மாணிக்கும் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாறான குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு சமுதாயப் பங்களிப்புடன் கூடிய வீடுகளைக் கட்டுவதற்கான பின்னிணைப்பை நல்லிணக்க அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டம், பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஓர் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கான கால அவகாசமும் வழங்கப் பட்டுள்ளது.

ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 5, டேவிட் வீதி, ஆதன இல 14/3 கபிரியல் அந்தோனிப்பிள்ளை என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கபிரியல் அந்தோனிப்பிள்ளை கைம் பெண் மரி கிருதா பிரசித்த நொத்தாரிசு வோல்ட் போனாட் கனகரட்ணா முகதாவில் நிறைவேறிய 1067 இலக்க 1955.12.10ஆந் திகதிய அறுதி உறுதி மூலம் வைத்தி ஆசீர்வாதம் பெண் அருளம்மாவிற்கு வழங்கியுள்ளார். ஆனால் குருநகர், இராஜேந்திரா வீதி, இல. 94/4 வல்லி நாகநாதி என்ற ஜெபநேசனும் பெண் செபமாலையும் குறித்த ஆதனம் தங்களின் 2ஆம் பேரான செபமாலையின் பெற்றோர் வைத்தி ஆசீர்வாதம் பெண் அருளம்மாவும் ஆகியோரின் மூலம் தங்களால் 2ஆம் பேரான குறித்த செபமாலையின் உரித்தும் ஆட்சியுமானது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு அ. இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 3864ஆம் இலக்க 2006.07.28ஆந் திகதிய சீதன உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த தங்கள் மகள் செபமாலை அன்ரனி யோசேப் பெண் கொன் செப்ராவுக்கு சீதனமாக வழங்கி தமது சீவிய உரித்துக்கு அமைய வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 5314/15.07.2009 திருத்தல் உறுதி வல்லி நாகநாதி என்ற ஜெபநேசனும் பெண் கொன் செப்ராவும் இக்குறித்த 3864ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதியில் உரித்து வாசகத்தில் 'வைத்தி ஆசீர்வாதம் பெண் அன்னம்மாவும்' மேற்கு எல்லையாக வலோரி பர்ணாந்தும் பெண் செபமாலையும் எனவும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுதியில் வைத்தி ஆசீர்வாதமும் பெண் அருளம்மாவும் எனவும் மேற்கு எல்லை வேலன் பர்ணாந்தும் பெண் செபமாலையும் எனவும் இருந்திருத்தல் வேண்டும் என வெளிப்படுத்தி திருத்தம் செய்துள்ளார்.

ஆதன விவரம்:- வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று குருநகர் இறை 'பறையன் மணற்காடு' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் MSI அவர்களின் வரை பட இலக்கம் 2678/2016.11.16 இல் துண்டு 01 எனக்காட்டப்பட்ட நில பர. 00 குளி 16.80 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு செபதேயு பெண் செலினினதும், அருளப்பு புவிராஜசிங்கத்தின் ஆதனம்.

வடக்கு:-இராசையா அந்தோனிப்பிள்ளை ஆதனம்.

மேற்கு:-வேலன் பர்ணாந்துவும் பெண் செபமாலை இவர்களின் ஆதனம்.

தெற்கு:-ஒழுங்கை.

தற்போது இவ்வாதனத்தை செபமாலை அன்ரனி யோசேப்பும் பெண் கொன் செப்ராசும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செபமாலை அன்ரனி யோசேப்பும் பெண் கொன் செப்ரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்

மாநகரசபை, யாழ்ப்பாணம்.

நல்லாட்சியின் எடுபிடிகளே வழக்குத் தாக்கல் செய்கின்றனர்!

மஹிந்த அணி குற்றச்சாட்டு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நல்லாட்சி அரசின் எடுபிடிகளே வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் முன் வைத்தார்.

இதற்கமைய இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவின் மாத்தறை மாவட்ட இணைப்பாளர், இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவின் உதவியாளர், பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிபுரியும் நபர் மற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வின்கண்டி மாவட்டத்தில் இருந்து ஒருவர் ஆகிய குழுவினராலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் சபையில் நேற்று சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் அஜித் பி. பெரேராவும், இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவும் முற்றாக நிராகரித்தனர்.

இந்த விவாதத்தின்போது சபையில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சித்திரவதைகள், இரகசியக் கைதுகளை உடன் நிறுத்தவேண்டும் இலங்கை அரசு

கனடாவின் வன்கூவரில் தமிழ் மக்கள் கவனவீர்ப்பு



இலங்கைத்தமிழர்கள் மீது தொடரும் சித்திரவதைகள், இரகசியக் கைதுகளை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறு நாடு கடந்த அரசாங்கத்தின் கனடா வன்கூவர் பிரதிநிதி மார்க். மோகனசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த இரு தினங்களாக ஐக்கிய நாடுகள் அமைதிப் படைகளின் அமைச்சர்கள் மாநாடு கனடாவின் வன்கூவரில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில்இலங்கைப்படைத் தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இலங்கைப் படைகளின் பிரசன்னத்தை எதிர்த்து கண்டனப்போராட்டம்ஒன்றைக் கனடா வன்கூவர் தமிழ் மக்கள் நடத்தியிருந்தனர்.இதில்நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர்.

இதில்கலந்துகொண்ட நாடுகடந்த தமிழீழ அரசின் வன்கூவர் பிரதிநிதி அசோசியேட்டட்பிரஸ்ஊடகத்திடம் கருத்து தெரிவிக்கையில் –

இலங்கைஇராணுவம் தமிழ்பெண்களைப் பாலியல் அடிமைகளாகக் கொடுமைப்படுத்துவது மிகவும் கண்டித்தக்கது. தொடர்ச்சியான சித்திரவதைகள். இரகசியக் கைதுகள்எனயுத்தப்பாதிப்புக்களுக்குள் இருந்து வெளியேறியோர் மீது தொடர்ந்தும் அழுத்தங்களைஅரசுமேற்கொண்டு வருவது எமக்கு மிகவும் வேதனையளிக்கிறது.

இலங்கை அரச படையினர் போர்க்குற்றங்கள் புரிந்திருந்திருக்கின்றன. எமதுமக்கள்மீதுதொடர்ந்தும் அவர்கள் வன்முறைகள், சித்திரவதைகளில் ஈடுபடுகின்றார்கள். ஐ.நா. படையில் இணைந்து கொண்டும் ஹெய்ட்டியில் பாலியல்வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரைகனடா அரசு நாட்டுக்குள் அனுமதித்தது மிகவும் வருந்தத் தக்கது.

வன்கூவர்சென்றுள்ள இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரட்ண, போர்க் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. அப்படியான சம்பவங்கள் இடம் பெறவில்லையென கூறியிருந்தார். உண்மைக்கு புறம்பான ஒரு தகவலை அவர் ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார்.

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் யுத்த பாதிப்புக்கள் கொண்ட பலர் இன்று கனடாவில் வசிக்கின்றனர். அவர்களை நான் நேரடியாக சந்தித்திருக்கிறேன்.அவர்கள்இன்றும் மன ரீதியாகப் பாதிப்பில் இருந்து மீள்வதற்குச் சிரமப்படுகின்றனர்.

இலங்கைப் படைகளிடம் சரணடைந்து காணாமல்போனவர்களின்உறவுகளும் கனடாவில் வசிக்கின்றனர். இவர்கள் இன்றும் யுத்த கொடூரங்களின் சாட்சியங்களாக எம்மருகில் உள்ளார்கள். நாம் சர்வதேச விசாரணை ஒன்றைக்கோரிநிற்கின்றோம்.

இறுதிப்போரின்போது சரணடைந்து காணாமல் போனவர்களுக்கான நீதி இதுவரை வழங்கப்படவில்லை.பாதிக்கப்பட்டமக்களுக்குசரியானவிதத்தில் மறுவாழ்வு வழங்கப்படவில்லை.

சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள்மூலம்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுச் சரியான தீர்வை நோக்கி எமதுமக்களைக்கொண்டு செல்லவேண்டும் – என்றார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் தேரர்களுக்கு மைத்திரி விளக்கம்

புதியஅரசமைப்புத்தொடர்பாகப் பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுவரும் சர்ச்சைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மல்வத்து மற்றும் அஸ்கிரியப் பீட மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கம்அளித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்களும் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்ததைத்தொடர்ந்து சர்வமதத் தலைவர்கள் மாநாட்டை நடத்தி அதற்கானவிளக்கத்தைஅளிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தநிலையிலேயே இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

புதியஅரசமைப்புயோசனைகள் தொடர்பில் நாட்டின் பல தரப்பினராலும் விமர்சனங்கள்முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சிலதரப்பிலிருந்துபுதிய அரசமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்ட போதிலும், பெரும்பான்மையினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அதிலும் முக்கியமாக புதிய அரசமைப்பு உருவாக்கம்தற்போதுதேவையற்றதுஎன்றுபௌத்தமக்களின் தலைமைப் பீடங்களான ராமன்ய, சியாம் மற்றும் அமரபுர ஆகிய பீடங்களின் மகாநாயகர்களும், பிரதிநிதிகளும்நல்லாட்சி அரசுக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அண்மையில் கூடிய மகாசங்கசபையிலும், புதிய அரசமைப்புதற்போதைய சூழ்நிலையில்அவசியமற்றது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் கண்டிக்கு நேற்றுவிஜயம்மேற்கொண்டஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன,மல்வத்து பீட மகாநாயக்க தேரர்திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இதன்போது பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகவும், அதிலும் குறிப்பாக புதிய அரசமைப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சந்திப்பைஅடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அஸ்கிரியப் பீடத்துக்கும்விஜயம்செய்து, விகாராதிபதி வெடருவே உபாலிதேரரைச்சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார்.

இந்த சந்திப்பின் போதும்புதியஅரசமைப்பு மீது காணப்படுகின்ற சந்தேகங்களுக்கு ஜனாதிபதியால் விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாக அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

மாவீரர்களின் நினைவேந்தலை தடுப்பதற்காகவா வாள்வெட்டு?

சந்தேகம் வெளியிடுகிறார் சி.வி.கே.

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் கார்த்திகை மாதத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கின்றமையானது, மாவீரர்தினத்தை அனுஷ்டிக்கவிடாது தடுக்கும்நடவடிக்கையாஎன்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கில் அதிகரிக்கும் வாள்வெட்டுச் சம்பங்கள் தொடர்பில், நேற்று வியாழக்கிழமைகருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

குடாநாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் வாள்வெட்டுச் சம்பவங்களைச் சுட்டிக்காட்டிய சிவஞானம், இதற்கான மூல காரணங்களைக் கண்டறிந்து முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமெனவும் கோரினார்.

புலிகள்கூடஎதற்காகத் தண்டனை வழங்குகின்றோம் என்று கூறிவிட்டே தண்டனை வழங்கினார்கள். ஆனால், எதற்காக தாக்கப்படுகின்றோம் என்று அறியாமலேயே இவ்வாறு தாக்கப்படுவதும், பரவலாக வாள்வெட்டு இடம்பெறுவதும் எங்கேயோ தவறு உள்ளது என்பதையே சுட்டி நிற்கின்றதென அவர் குறிப்பிட்டார்.

சட்டம் ஒழுங்கை தீவிரமாகச்செயற்படுத்தி, இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதுடன், சம்பவங்களைப் புலனாய்வுக்கு உட்படுத்தி தெளிவான நடவடிக்கைகளைவிரைவாகஎடுப்பது அவசியமெனவும்சிவஞானம் சுட்டிக்காட்டினார்.

சில இடங்களில் மோட்டார்சைக்கிள்களில் மூன்று பேர் செல்வதாகவும், சிலர்தலைக்கவசம் இன்றியும் பயணிப்பதாகவும் குறிப்பிட்ட அவர், இவ்வாறானவர்கள் மீது சட்டம் ஒழுங்கை கடுமையாகச் செயற்படுத்தினால் அது ஏனையவர்களுக்கு பாடமாக அமையுமெனவும் கூறினார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு நாளை

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப்பரிசளிப்புவிழா நாளை சனிக்கிழமை ஆகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும்.

கல்லூரியின் அதிபர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

கொழும்புதேசியவைத்தியசாலையின் உள்ளக நிபுணர், டாக்டர் அம்பலவாணர் பரமகுருநாதன் மயூரிசன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியை திருமதி லாவண்யா மயூரிசன் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார். (அ)

இந்திய மீனவர்கள் 10 பேர் பருத்தித்துறையில் கைது

நவம்பர் 30 வரை விளக்கமறியல்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 10 பேரையும் நவம்பர் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் நாகைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த பத்து மீனவர் பருத்தித்துறைக்குவடக்கே13கடல்மைல் தொலைவில் மீன்பிடியில்ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறைக்கடற்படையினரால் நேற்று முன்தினம்இரவுகைதுசெய்யப் பட்டனர்

அவர்களின் இரண்டு இழுவைப்படகுகளும்மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்திய மீனவர்கள் 10 பேரும் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுப் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போதே இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவரிகளது அச்சகத்தில் 17.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.